வைத்திய கலாநிதி

THE VAIDYA KALANIDHI

EDITOR
Pandit M. Duraiswami Aiyangar
Ayurveda Bhushana

பத்திராதிபர்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷண

புஸ்தகம் 1. Vol. 1. | ப்ரமாதீசஸு புரட்டாசிமீ —OCTOBER 1913 | ஸஞ்சிகை 2. No. 2.

HOW TO STUDY THE AYURVEDA.

ஆயுர்வேதத்தைப் படிக்கும் முறை.

(முதல் ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

BY

Vaidyaratna

PANDIT D. GOPALACHARLU. A. V. S.

Ayurveda Marthanda and Bhishangmani.

ஆயுர்வேதத்திற்கு அங்கமான சல்யதந்திரம்.

அநேக வகையான உருவங்களையுடைய சல்யங்கள் சரீரத்தினுள் பிரவேசிக்கும் மாதிரி, அவற்றின் நிலைமை, அவற்றை வெளிப்படுத்தும் உபாயங்கள், அவற்றிற்கு அவசியமான யந்திரங்கள், சஸ்திரங்கள், அவற்றின் நிர்மாணம், உருவம், பதனிடல் என்னும் இவ்விஷயங்களும், இரத்தம் முதலியவற்றின் கசிவு-வர்ணம்-வாஸனை-தோஷம்-உபத்திரவம்முதலானவற்றுடன் கூடிய சாரீர ஆகந்துக விரணங்களை அறியும் வகைகளும்*, அந்தந்த ரோக பேதங்களை அனுஸரித்து அறியப்பட்ட சஸ்திர சிகித்ஸையின் அபிவிருத்திவிஷயமும், இயற்கைக்கு மாறாக நேரிடும் பிரஸவங்களில் திறமையுடன் செய்யக்கூடிய சஸ்திர சிகித்ஸாகிரமமும், கண்-காது-மூக்கு-தொண்டை முதலிய அவயவங்களில் செய்யக்கூடிய சாலாக்ய சிகித்ஸையென்னும் சஸ்திரசிகித்ஸையின் மேன்மைகளும், பல்லாயிர வருஷங்களுக்கு முன்னமே மஹர்ஷிகள் இவ்விஷயங்களைக் கண்டறிந்த ஸாமர்த்தியங்களும் அனைவராலும் அறியப்படவேண்டுமென்றெண்ணி, இருஷிகள் அவற்றைக் கண்டறிந்தவகைகளையும், அவர்கள் சிஷ்யர்களுக்கு போதித்த முறைகளையும் ஸுச்ருதஸம்ஹிதையை அனுஸரித்து சுருக்கமாய் எழுதுகின்றேன்:—

சல்ய சப்தத்தின் விற்பத்தி.

'சலதி-ஆசு கச்சதி' என்கிற விற்பத்தியினால், சரீரத்தினுள் வேகமாகவும் தீக்ஷணமாகவும் பிரவேசித்து தேஹத்திற்கெல்லாம் பாதையுண்டுபண்ணும் எந்த வஸ்துவும் சல்யம் (அம்பு முதலியது) எனப் படும். அதர்வணவேதத்தில் சல்யபதத்திற்கு ஆங்காங்கு பற்பல பொருள்கள் கூறப்பட்டிருந்தாலும், விஷம் பூசிய பாணம் என்கிற அர்த்தமே பெரும்பாலும் வழங்கப்பட்டிருக்கிறது. (அதர்வவேதம், கா. 4. பே. 542, 543.)

* சரீரத்தில் வாதாதிதோஷங்களின் கோளாறுகளால் உண்டாகும் விரணம் சாரீரமென்றும், காயம் [பட்]டதால் நேரிடுவது ஆகந்துகமென்றும் கூறப்

சல்யதந்திரத்தைக் கண்டறிந்த வழி.

மேலும் ஸுச்ருதத்தில், 'சர வவாதிக்ருத:' என்று, மெல்லிய முனையுடையதாய், கறுக்காக சரீரத்தினுள் உடனே நுழைந்து உயிருக்குத் தீங்கை யுண்டு பண்ணும் லோஹமயமான கூரிய வஸ்துவே சல்யமென்று ஸ்பஷ்டமாய் கூறப்படுகிறது. யுத்தத்தில் பிரயோகிக்கப்படும் பற்பல உருவமுள்ள சல்யங்கள் (அம்புகள்) சரீரத்தினுள் நுழைந்து அதிக பாதைகளை யுண்டாக்கும். அவை சரீரத்தினுள் பிரவேசிக்கும் வகைகளையும், அவற்றின் பரிணாமங்களையும், வழிகளையும் தெரிந்து கொள்வதற்காக, அங்கங்கள் ப்ரத்யங்கங்கள் முதலிய பேதங்களுடன் கூடிய சரீரதத்துவ சாஸ்திரத்தை முன்னோர் அப்பவித்தனர். பிறகு அவற்றாலுண்டாகும் பாதைகளை விலக்குவதற்கு அனேக உபாயங்களை யறிய முயன்றனர். அதில் விசேஷோபாயங்களான யந்திர சஸ்திரங்களையும் கண்டு பிடித்தனர். பிறகு சல்யங்களின் பலவிதமான உருவங்களுக்கு ஏற்றவாறு கங்கமுகம், ஸிம்ஹாஸ்யம் முதலிய யந்திர பேதங்களையும், மண்டலாக்ரம், வ்ருத்திபத்ரம், வேதஸபத்ரம் முதலான சஸ்திரங்களையும், அட்டை, காந்தம், சூரியகாந்தம் முதலிய ஸாதனங்களையும் தெரிந்து கொண்டனர். மேலே கூறிய யந்திர சஸ்திர ஸாமக்ரிகளைக்கொண்டு, சரீரத்தில் பிரவேசித்து பாதை செய்யும் சல்யங்களை வெளியில் எடுத்தெறிவதற்காக, சேதனம் பேதனம் முதலிய சஸ்திர சிகித்ஸா முறைகளையும் கண்டுபிடித்தனர். சஸ்திர சிகித்ஸையின் முறைகளில் சரீரத்தில் பிரவேசித்திருக்கும் 'சல்யம்' என்கிற வஸ்துவை வெளியிலெடுக்க முயன்றதினாலேயே 'சல்யதந்திரம்' என்பதை ஆயுர்வேதத்தில் மஹர்ஷிகள் சேர்த்து விவஹரிக்கத் தொடங்கினர். கிரமமாக சஸ்திரசிகித்ஸையிலேற்பட்ட ஸாமர்த்தியத்தினால், சரீரத்தினுள் பொத்தி வேதனைகளை யுண்டாக்கும் இரும்புத்துண்டுகள், பற்கள், எலும்புகள், சிறு கற்கள், முள் இவை முதலியவற்றையும் சல்யங்கள் என்றே வழங்கினர். மேலும், வாதம் முதலிய தோஷங்களின் கோளாறுகளால் சரீரத்திலுண்டாகும் சஸ்திர சிகித்ஸை முதலியதால் நிவ்ருத்திக்கத் தகுந்த வித்ரதி (Abscess) முதலிய வியாதிகளையும் கூட சல்யமென்றனர். அன்றியும், வேறு சிலர் மனதுக்கும் சரீரத்திற்கும் பாதைகளை யுண்டு பண்ணும் வாதாதி தோஷங்களாலுண்டாகும் ஸாதாரண வியாதிகளையும் சல்யமென்றே சொல்லத் தொடங்கினர். இவ்விதமாக கிரமமாய் மேன்மையடைந்து வந்த அறிவினால், சரீரத்திற்கு நேரிடும் ஸாதாரண பாதைகளுக்கும் சல்யமென்கிற பெயரை வழங்கி வந்தும், சல்யதந்திர மறிந்தவரான தன்வந்தரி முதலியவர்கள், வெளியிலிருந்து சரீரத்தில் பிரவேசிக்கும் அம்புதான் சல்ய மென்பதாகக் கூறினர்.

சரித்திரக்காரர்களின் கருத்தும் ஸித்தாந்தமும்.

ஆதியில் க்ரீக்தேசத்தவர் ஈஜிப்ட் மதாசாரியர்களிடமிருந்து ஆரியர்களின் வைத்திய சாஸ்திரத்தை அறிந்தார்களா, அல்லது அலெக்ஜாண்டரின் யுத்தயாத்திரைக்குப் பின் க்ரீக்தேசத்தவரிடமிருந்து ஆரியர்களே வைத்திய சாஸ்திரங்களை ஸம்பாதித்து, சரக ஸுச்ருதம் முதலிய வைத்தியக் கிரந்தங்களை இயற்றி, காயசிகித்ஸை சஸ்திர சிகித்ஸைகளை மஹோன்னதபதவிக்குக் கொண்டுவந்தார்களா என்று சர்ச்சையிலிருப்பதாக சரித்திரக்காரர் எழுதுகின்றார்கள். டாக்டர் வைஜ் என்பவர் தமது ஆசியா தேசத்து வைத்திய சரித்திரம் (History of Medicine among the Asiatics) என்கிற நூலில், முதலிற் கூறிய கொள்கையை திடப்படுத்தி யிருக்கின்றார். ஹிபாக்ரிடீஸ் என்பவர் எழுதிய ஸங்கிரஹகிரந்தங்களில், இப்பொழுது பிரஸித்தமாயுள்ள சஸ்திர

கித்ஸாவிஷயமான சாஸ்திரம் ஸுச்ருதத்திலுள்ள விஷயங்களுக்குத் தகுந்தவைகளாயிருக்கின்றனவென்றும், மஹர்ஷிகள் கண்டறிந்த சஸ்திரசிகித்ஸாவிஷயங்கள் ஸுச்ருதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், இவ்வித பெரிய காரியம் இருஷிகளாலேயே முதலில் நிறைவேற்றப்பட்டதெனவும், மஹா அலெக்ஜாண்டர் யுத்தயாத்திரை செய்தகாலத்திற்கு முன்பே ஆர்யர்கள் காயசிகித்ஸை சஸ்திர சிகித்ஸைகளில் அளவற்ற அறிவுடையவர்களென்று பெரும் புகழ் பெற்றிருந்தனரெனவும், இன்னும் இவை போன்ற அனேக விஷயங்களை சரித்திரக்காரர்கள் (Strabo and Arrian) சொல்லியிருக்கிறார்கள்.

நமது சல்யதந்திரம் பிராசீனமானது.

முற்கூறிய காரணங்களாலும், 'யஜ்ஞஸ்ய சிரோச்சித்யத' (ருக்வேதம்-காண்டம் 6-ப்ரச்னம் 4 மந்திரம் 9), 'தஸ்மா அக்ஷி நாஸத்ய... ஸத்யோ ஜங்காம ஆயஸீம் விஸ்பலாயை' என்கிற வேதவாக்கியங்களால், அறுபட்ட சிரஸ்ஸு கால்-கண்-மூக்கு முதலியவற்றை அவற்றிற்குத் தகுந்த வேறு பொருள்களைக் கொண்டு சேர்த்தமைப்பது முதலிய சஸ்திரசிகித்ஸையில் அச்வினீ தேவதைகளுக்கு ஸாமர்த்தியம் அதிகமிருந்ததாகக் காணப்படுவதாலும், ஆர்யர்கள் கண்டுபிடித்த சல்யதந்திரமே பிராசீனமென்று வியக்தமாகிறது. இதில் முந்தியது பிந்தியது என்பதைப்பற்றி சர்ச்சை செய்யும் இக்காலத்திய நாகரிகர்களான சில சரித்திரக்காரர்கள், ருக்வேதம் முதலியவற்றிலுள்ள விஷயங்கள், மந்திரரூபமாயிருப்பதால், இந்த சஸ்திரசிகித்ஸாசாஸ்திரத்தின் பழமையைக் குறித்துத் தெரிந்துகொள்ளாமலிருந்தது ஆச்சரியமல்ல.

சல்யதந்திர பரம்பரை.

தேவவைத்திய ரெனப்படும் அச்வினீ தேவதைகள் சஸ்திரசிகித்ஸையில் நிபுணராயிருந்ததாக ருக்வேதம் முதலியவற்றில் கொண்டாடப்பட்டிருப்பதால், சஸ்திரசிகித்ஸையானது இங்கு வைதிக யுகத்திலேயே மேன்மைபெற்றிருந்ததாய் அறியப்படுகிறது. பிறகு காயசிகித்ஸையில் திறமை பெற்றிருந்த அக்னிவேசர், ஆத்ரேயர் இவர்களது கொள்கையை அனுஸரித்த சரகர் தன் கிரந்தத்தில் சிகித்ஸாஸ்த்தானம் 25-வது அத்தியாயத்தில் பாடனம், வ்யதனம், சேதனம், லேகனம், ப்ரச்சனம், ஸீவனம் என்கிற ஆறுவித சஸ்திரவேலைகளை அறிவிப்பதால்; அவர்களுடைய காலத்திலேயும் சல்யதந்திரம் அபிவிருத்தியாயிருந்ததாகத் தெரியவருகிறது. பிறகு ஔபதேனவர், ஔரப்ரர், புஷ்கலாவதர், கரவீரர், மார்க்கண்டேயர், பராசரர், தன்வந்திரி முதலிய சல்யசாஸ்திரநிபுணர்களின் மதங்களை அனுஸரித்து ஸுச்ருதர் தனது கிரந்தத்தில் சரகரைவிட ஆஹார்யம், விஸ்ராவ்யம் என்கிற இரண்டு விதமான சல்யகர்மங்களை அதிகமாகச் சேர்தது எட்டு விதங்களென்று சொல்வதால், சரகாசாரியருடைய காலத்திலும் ஸுச்ருதருடைய காலத்தில் சஸ்திரசிகித்ஸை இன்னும் அபிவிருத்தியானதாக விளங்குகின்றது. பின்னால், வாக்படாசாரியர் அஷ்டாங்கஸங்கிரஹத்தில் ஸூத்ரஸ்த்தானம் 34-வது அத்தியாயத்தில், ஸுச்ருதர் சொன்ன எட்டு வித சஸ்திரங்களுடன் நான்கு சஸ்திரங்களை அதிகமாகச் சேர்த்து சஸ்திர கர்மம் 12-விதங்களென்று நிரூபித்திருக்கிறார். மேலும் 24-வித சஸ்திரகர்மங்களும் இதில் விசேஷமாய் விவரிக்கப்பட்டிருப்பதால், ஸுச்ருதருடைய காலத்திலும் வாக்படாசாரியருடைய காலத்தில் சல்யதந்திரம் கிரமமாக மேன்மை பெற்று வந்ததாயறியப்படுகிறது. பிறகு, உக்ராதித்யன் முதலானவர்கள் ஸுச்ருதர் முதலியவர்களின் மதத்தை அனுஸரித்தே சஸ்திர

சிகித்ஸைகளை நடத்தி அபிவிருத்திக்குக் கொண்டுவந்ததாகத் தெரியவருகிறது. வெகு காலத்திற்கு முன் தன்வந்தரியின் மதத்தை அவலம்பித்த ஸுச்ருதாசாரியர், தனது கிரந்தத்தில் அச்மரீ (மூத்திரத்தில் கல்லுண்டாகுதல்), மூடகர்ப்பம் (கருப்பையிலிருந்து சிசு வெளியாகக் கஷ்டப்படுதல்), நாஸாபங்கம், மஹோதரம் முதலிய ரோகங்களில் சஸ்திர சிகித்ஸை செய்து வந்ததை இந்த சிகித்ஸையில் மேம்பாடடைந்த ஆங்கில வைத்தியர்களே கொண்டாடுகின்றனர்.

சாரீர சாஸ்திரத்தின் அறிவு.

முன் கூறியபடி சரீரத்தினுள் பொத்திய சல்யங்களையும், அவற்றின் உருவம் சரீரத்தினுள் பிரவேசித்திருக்கும் மாதிரி முதலிய வற்றையும், சரீரத்தினுடைய அங்க ப்ரத்யங்காதி விஷயமான அறிவின்றியே தெரிந்து கொள்வது கஷ்டமானதால், அவ்வழிகளை அறியுமுபாயங்களைப்பற்றி, ஸுச்ருதாசாரியர் தனது ஸம்ஹிதையில் சாரீரஸ்த்தானத்தின் 5-வது அத்தியாயத்தில் இவ்விதமாகக் கூறுகிறார்:—சாரீர சாஸ்திரத்தில் பூர்ணமான அறிவு வேண்டுமென்றால், இறந்துபோன மனிதனுடைய உடலை நேரில் பிரத்யக்ஷமாய் பரீக்ஷை செய்வதற்காக (Dissection) அவ்வுடலின் ஒவ்வோரவயவத்தையும் நன்றாகக் கண்களால் பார்க்க வேண்டும். பரீக்ஷைக்காக ஏற்படுத்தும் உடல் அதிக விருத்தனுடையதாகவும், நீடித்த காலம் ரோகத்தினால் பீடிக்கப்பட்டதாகவும், விஷம் முதலியவற்றால் இறந்துபோனதாகவும் இராமல் எல்லா அவயவங்களும் நன்றாயிருக்க வேண்டியது அவசியம்.

பரீக்ஷிக்கும் விதம்.

மரித்த சரீரத்தின் குடலிலிருக்கும் மலம் முதலியவற்றை முதலில் வஸ்தி (Enima) செய்து வெளிப்படுத்த வேண்டும். பிறகு முஞ்சி, தர்ப்பம் முதலியவைகளைக்கொண்டு எல்லா அவயவங்களையும் சுற்றி, மீன்முதலிய ஜந்துக்கள் நெருங்காதபடியும், பிரவாஹத்தில் அடித்துக்கொண்டு போகாத விதமாகவும் ஒரு தகுந்த கூட்டினுள் வைத்து, ஓட்டமில்லாத நீரில் அமிழ்த்தி வைக்கவேண்டும். ஏழு நாட்களான பிறகு நன்றாக அழுகிய சரீரத்தை வெளியிலெடுத்து, தர்ப்பம் ஞாழல் முதலியவற்றினால் செய்த அலகுகளால் மாம்ஸகண்டரங்கள் (Muscles), ஸிரைகள் (Veins), ஸ்நாயு (Nerves), தமனீ (Arteries), ஆந்த்ரம் (Intestines), யக்ருத் (Liver), ப்லீஹம் (Spleen), ஹ்ருதயம், வ்ருக்கம் (Kidney), புப்புஸம் (Lungs), க்லோம (Pancreas) முதலிய உள்ளவயவங்களையும், எலும்புகள் அவற்றின் ஸந்திகள் முதலியவற்றையும் விபஜனை செய்து நன்கு பரீக்ஷிக்கவேண்டும்.

சஸ்திரசிகித்ஸாசாலையில் தயாரா யிருக்கவேண்டிய வஸ்துக்கள்.

சஸ்திரங்கள் (Instruments, Lancet &c.), யந்திரங்கள் (Surgical appliances-Forceps &c.), க்ஷாரம் (Alkali), அக்னி, அட்டை, சலாகை (Probe or Director), அலாபு (Prepared Gourd), ஜாம்பவோஷ்டம் (Conterisinge instrument), பிசு (Cotton), ப்லோதம் (Lint), நூல்கள், பட்டம் (Tow), தேன், நெய், கொழுப்பு, பால், எண்ணெய், தர்ப்பணம் (Powdered wheat soaked in water), கஷாயம், ஆலேபனம் (Medicated plaster), கல்கம் (Paste), விசிறி, குளிர்ந்த நீர், வெந்நீர், கவலிகை (Splints), மண்வாணல், ஸ்த்தாலி, படுக்கை (கட்டில் முதலியது), ஆஸனங்கள் முதலான உபகரணங்களும், மூங்கிலின் மேல்தோல் (Skin of Bomboos), ஸ்படிகம் (Crystals), குருவிந்தம் (Kuruvinda stone), காந்தக்கல் (Magnets), கண்ணாடித்துண்டு முதலிய பதார்த்தங்களும், கட்டுவத

ற்கு வேண்டிய பட்டு முதலியவைகளும், மயக் கந்தரக்கூடிய தீக்ஷ்ணமத்யங்களும், ஜடாமா ம்ஸி முதலிய பிரஞ்ஞை யுண்டுபண்ணும் பதா ர்த்தங்களும், அன்புள்ளவரும் திடசரீரிகளும் திறமைசாலிகளுமான பரிசாரகர் முதலியவர் களும் சித்தமாயிருக்கவேண்டும்.

மயக்கமுண்டாக்குவது.

சஸ்திரசிகித்ஸை செய்வதற்குச் சற்றுமுன் உசிதமான உணவை ரோகிக்குக் கொடுக்க வேண்டும். சஸ்திரசிகித்ஸை செய்யும்போது உண்டாகும் பாதைகள் தெரியாமலிருப்பதற் காக நன்கு மயக்கந்தரும் மத்யங்களைக் குடிக் கத் தரவேண்டும். சஸ்திரகர்மத்திற்கு முன்பு ஆஹாரமுண்பதுடன் மத்யமும் பானம் செய் தால் மயக்கமுண்டாகும். 1872-ம் வருஷத் தில் டாக்டர்; ஸர் ஜேம்ஸ்துரையவர்கள் க்ளோரோபாரம் கண்டுபிடிப்பதற்கு முன், ஆங்கில வைத்தியர்கூட மேற்கூறிய வழியை யே அனுஸரித்து வந்தார்கள்.

சஸ்திர கர்மாப்யாஸ மார்கம்.

சிஷ்யன் சாஸ்திரார்த்தங்களில் ஊக்கமுள் ளவனாயிருந்தும், பிரத்யக்ஷானுபவத்தில் பயி ற்சியில்லாமற்போனால் சிகித்ஸை செய்வதற்கு யோக்யதை யுடையவனாக மாட்டானாகையால், குருவானவன் சேதனம், பேதனம் முதலிய சஸ்திரகர்மங்களிலும், தைலம் முதலிய வற்றால் செய்யப்படும் வஸ்திகர்மங்களிலும் அனுபவவழிகளை முதலில். அனேகவகைகளில் நேரில் காட்டி சிஷ்யனுக்கு விஷயங்களை நன்கு கற்பிக்கவேண்டும்.

சேதன கர்மம்.

முதலில் சுரைக்காய், வெள்ளரிக்காய், பூசினி முதலிய காய்களை அறுத்து அதன்மூல மாய் சேதனம் செய்யவேண்டிய வழியை அறி விக்கவேண்டும். இதேவிதமாக உத்கர்த்த னம் (அடியிலிருந்து மேல்நோக்கி அறுத்தல்), பரிகர்த்தனம் (சுற்றிலும் அறுத்தல்) முதலிய வற்றையும் போதிக்க வேண்டும்.

பேதனமும் லேகனமும்.

நீர் நிரம்பிய துருத்திகளையாவது, மரித்த ஜந்துக்களின் மூத்திரப்பைகளையாவது, பசை யுள்ள பதார்த்தத்துடன் கூடிய தோல் துருத் திகளையாவது பிளந்து முதலில் பேதனம் (பிளத்தல்) என்னும் சஸ்திர கர்மத்தைக் காட் டவேண்டும். ரோமங்களுள்ள சர்மம் முதலி யதை நெடுகவும் குறுக்கிலும் கீண்டு லேகனம் என்னும் சஸ்திரகர்மத்தை அறிவிக்கவேண் டும்.

வேதன கர்மம்.

இறந்துபோன ஜந்துக்களின் நாடி நரம்பு முதலானவைகளைக் குத்தி முதலில் வேதனம் என்னும் சஸ்திரகர்மத்தைத் தெரிவிக்கலாம். இவ்விதமாக ஜலோதரமென்னும் மஹோ தரத்திலும் மூத்திரவிருத்தியிலும் மட்டுமே செய்யவேண்டியது.

ஏஷ்யகர்மமும் ஆஹார்யகர்மமும்.

புழுமுதலியவற்றால் எரிக்கப்பட்ட சிறிய மர த்துளைகளிலும், மூங்கில்களிலுள்ள துளைகளி லும், தாமரைத்தண்டு முதலான கொடிகளி லுள்ள இரந்த்ரங்களிலும், உலர்ந்துபோன சுரைக்காயிலும் ஏஷணீ என்னும் நீண்ட சலா கையை உபயோகிக்கும் விதத்தைக் (துளாவு தலை) காட்டவேண்டியது. பலாப்பழம், பில்வப் பழம் முதலிய பழங்களிலிருந்து விதைகளை வெளியில் எடுப்பதைக்கொண்டு ஆஹார்யம் என்னும் வேலையைச் செய்யவேண்டியது.

விஸ்ராவ்யமும் ஸீவனமும்.

இலவம்பலகையில் மெழுகைப் பூசி அதன் மேல் பிரதிமைகளை எழுதி அந்தந்த பிரதேச ங்களிலிருந்து சீழ்முதலிய தோஷங்களை வெ ளிப்படுத்தும் பாவனையாக விஸ்ராவ்யகர்மத் தை அவற்றின் விவரங்களைக் கொண்டு விளக்

கவேண்டியது. மிருதுவான வஸ்திரம் தோல் முதலியவைகளைத் தைத்து அதன் மூலமாய் ஸீவனம் என்னும் வேலையைச் செய்து காட்ட வேண்டும்.

கட்டுகளைக் கற்கும் விதம்.

துணி, மண், மரம், தோல் முதலிய வற்றால் செய்யப்பட்ட புருஷாக்ருதியான பிரதிமையின் கைகால் முதலான அவயவங்களில் பல விதமான கட்டுகளைக் கட்டி பந்தனமுறைகளையும் போதிக்கவேண்டும். ஸாதாரண நூல்களாலாகிய துணி, மெல்லிய கம்பளி, நார்ச்சீலை, பட்டு, பௌண்ட்ர மகததேசம் முதலானவிடத்தில் நாகமரமென்கிற விருக்ஷத்தின் நார்களால் செய்த பத்ரோர்ணம் என்கிற வஸ்திரம், சைனதேசத்திய பட்டு, பதனிட்ட நல்ல மெதுவான சர்மம், பூர்ஜபத்திரம், சுரைக்காயின்மேல் தோல், கொடி, மூங்கில் முதலியவற்றின் பத்தை, கயிறு, பஞ்சு, இவற்றை அந்தந்த வியாதிகளையும் தேசகாலங்களையும் அறிந்து கட்டுவதற்கு உபயோகிக்கவேண்டியது.

பலவகையான கட்டுகள்.

கோசம் (பைபோன்ற கட்டு), தாம (மாலையைப்போன்றது), ஸ்வஸ்திகம் (காக்கையின் காலைப்போல் குறுக்கிலும் நெடுகவும் மாற்றி மாற்றி கட்டுதல்), அநுவேல்லிதம் (வளைத்துச் சுற்றுதல்), மண்டலம் (சக்கிரம்போன்றது), ஸ்த்தகிகை (வெற்றிலை மடிப்புபோன்ற முனையுடையது), யமகம் (இரட்டையானது), கட்வா (மஞ்சத்தின் கால்போன்றது), விபந்தம், பஞ்சாங்கீ (ஐந்தைந்து மடிப்புள்ளதைப் போலிருப்பது) என்று பலவிதமான கட்டுகள் ஏற்பட்டிருக்கின்றன.

அவயவங்களுக்குத் தகுந்தவாறு கட்டு கட்டுதல்.

பெருவிரலின் கணுக்களில் கோசபந்தனமும், இடுக்கான அவயவங்களில் தாமபந்தனமும், ஸந்திகள் புறங்கை புறங்கால் மணிக்கட்டு காது ஸ்தனம் முதலிய விடங்களில் ஸ்வஸ்திகமும், கை கால்களில் அநுவேல்லிதமும், திரண்டுருண்ட அவயவங்களில் மண்டலமும், விரல் ஆண்குறி முதலியவற்றின் முனைகளில் ஸ்த்தகிகையும், இரட்டையான விரணங்களில் யமகமும், கன்னம் முதலிய விடங்களில் கட்வமும், முதுகு வயிறு மார்பு இவைகளில் விபந்தமும்—இவ்வாறு எவ்வெவ்விடங்களில் எந்தெந்த விதமான கட்டுகள் நன்றாய் அமையக்கூடுமோ அவ்வவ்விதமாக பந்தனம் செய்து, பிறகு விரணத்திற்குக் கீழாவது பக்கத்திலாவது முடியைப் போடவேண்டும்.

முடிபோடும் வகைகள்.

காடபந்தனம் (இறுகக் கட்டுதல்), ஸமபந்தனம், சிதிலபந்தனம் (நெகிழக் கட்டுதல்) என்று முடியானது (Fastening of bandage) மூன்று வகைப்படும். அக்குள், பக்கங்கள், நாபிக்குக் கீழுள்ள அவயவங்கள், ஸ்தனம், தலை இவ்விடங்களில் காடபந்தனமும், காதுகளுக்குச் சுற்றிலும், தோள்பட்டை, பாதங்கள், வாயைச் சுற்றிலும், கழுத்தைச் சுற்றிலும், ஆண்குறி, முதுகு, நாபி இப்பிரதேசங்களில் ஸமபந்தனமும், கண், ஸந்திகள் முதலிய இடங்களில் சிதிலபந்தனமும் போடவேண்டியது.

பந்தனவகைகள் தகுந்தவாறு செய்யப்படுமானால், விரணங்களை மெதுவாகச் செய்து, அவற்றிலுள்ள இரத்தத்தையும் சுத்தமாக்கி அவற்றை நன்கு ஆற்றிவிடும். கட்டுகளைக் கட்டாவிடின், விரணமானது கொசு முதலியவற்றால் கெட்டுப் போய் தம்புகள் படிந்து அதில் வீக்கமுண்டாகும். அன்றியும், குளிர்ச்சி வெயில் முதலியதின் ஸம்பந்தத்தினால் வெகு கெட்ட விரணமாகவும் ஆய்விடலாம். விரணங்களின் மேலுபயோகித்த லேபங்கள் உலர்ந்து விட்டால் வேதனை அதிகமாகும். ஆகையால்

ஜாக்கிரதையாகக் கவனித்து பற்பல பந்தனங்களையும் அந்தந்த ஸமயங்களில் செய்ய வேண்டிய காரியங்களையும் கிரமமாகச் செய்து அப்யஸிக்கவேண்டும்.

ஆசாரியன் செய்ய வேண்டிய போதனை.

மனித சரீரத்தை உள்ளும் புறமும் நன்றாகக் கண் முன்னிலையில் பரீக்ஷித்து, இலக்ஷிய இலக்ஷணங்களில் ஆறித் தேறி ஸந்தேஹம் தெளிந்து ஆயுர்வேதத்தில் பாரங்கதனாயிருப்பவன் சிகித்ஸை செய்வதற்கு யோக்யதையுடையவனாகிறான். நிர்மலமாகவும், மயிர்களையும் நகங்களையும் வளரவிடாமல் வைத்துக்கொண்டும், வெகு சுத்தமான வஸ்திரம் முதலியதை யுடுத்து, பிராணிகளிடம் தயை யுள்ளவனாயிருந்து, அது வரையில் அறிந்து வந்த விஷயங்களை ரோகிகளைப் பரீக்ஷிக்கும் வகைகளினாலும் பிரத்யக்ஷானுபவங்களாலும் திடப்படுத்திக்கொள்ளவேண்டும். பிறகு இராஜாஞ்ஞையைப் பெற்று விசிகாநுப்ரவேசம் (வைத்தியத் தொழில்) செய்ய முயலவேண்டும். என்கிற விஷயங்கள் ஆசாரியனால் சிஷ்யனுக்கு உபதேசிக்கப்பட வேண்டியவையாம்.

SOME OF THE COMMON FEVERS OF MADRAS.

சென்னையில் வழக்கமாய் வரும் சில ஜ்வரங்கள்.

By

Dr. P. N. RANGASWAMI, L. M. & S.
Physician and Surgeon.

சென்னப்பட்டணத்து ஜனங்களை அடிக்கடியும் பீடிக்கும் நச்சுக்காற்றுகளாலுண்டாகும் சில ரோகங்கள் உண்டு. அவை பெரும் பான்மையும் ஜ்வரத்தைச் சேர்ந்தவைகளாகும். சென்னையில் சற்றேறக் குறைய ஒவ்வொரு வீட்டிலும் இந்த ஜ்வரத்தினால் கஷ்டப்படுகிறவர்களைப் பார்க்கலாம். முக்கியமாய் ஜார்ஜ் டவுன் என்கிற பாகத்தில் ஜ்வரம் அதிகமாயிருப்பதாகக் காணப்படுகிறது. இந்த ஜ்வரங்களுள் மிகவும் பிரபலமானவை மலேரியா என்கிற விஷமஜ்வரமும், கலா அஜார் என்னும் மற்றொரு விஷஜ்வரமுமேயாம்.

இப்பொழுது மலேரியா என்பது என்ன, அது எப்படி உண்டாகிறது, அதை நிவர்த்திக்கும் உபாயம் யாது என்பதைப்பற்றிச் சிறிது விவரிப்போம். மலேரியா என்னும் விஷமஜ்வரத்தை அதன் முக்கியமான குறிகளைக்கொண்டு அறிந்து கொள்ளலாம். இது ஸாதாரணமாய் தினந்தோறுமாவது அல்லது ஒன்று விட்டு ஒரு நாளாவது வரும். இதில் முதலில் குளிர் உண்டாய் கடைசியில் சில மணிநேரம் ஜ்வரம் அதிகமாய் அடிக்கும். ஜ்வரம் விடும்போது விசேஷமாக வேர்வையுண்டாகும். சில நாள் வரையில் முறைப்படி இப்படியே அடித்துவருவதால் இதை முறைக் காய்ச்சலென்றும் வழங்குகிறார்கள். இதை தொற்று வியாதி யென்று ஒவ்வொருவரும் அறிந்திருக்கவேண்டியது மிகவும் அவசியம். அறிந்திருப்பவர் இவ்விஷயத்தை அறியாத ஜனங்களுக்கும் தெரிவிக்கவேண்டும். இது ஒருவனிடத்திலிருந்து வேறொருவனிடம் கொசுக்களின் மூலமாய் பரவி விடுகின்றது. ஆகையால்தான் பொதுவாக இந்த ஜ்வரம் கொசுக்கள் அதிகமாயிருக்கிற இடங்களில் வியாபிக்கின்றது. கொசுக்களில் அனேக விதமுண்டு. இவற்றுள் மலேரியா ஜ்வரத்திற்குக் காரணமான பூச்சிகளைக் கொண்டு போகும் கொசுக்கள் அனோபிலஸ் (Anopheles) என்று கூறப்படும் ஜாதிகளாம். இவை நல்ல குடி நீருள்ள குளம் குட்டைகளில் மட்டுமே உற்பத்தியாகும். துர் நாற்றமும் அழுக்கும் சேர்ந்த சாக்கடைகளிலாவது, சாக்கடைஜலம் தங்குமிடங்களிலாவது இம்மாதிரி

யான கொசுக்கள் உண்டாவதில்லை. ஆனால் இவ்விடங்களில் கொசுக்களே உண்டாகாதென்பதல்ல; இவ்வித சாக்கடை முதலிய விடங்களிலுண்டாகும் கொசுக்கள் இந்த ஜ்வரத்தைப் பரவச் செய்ய சக்தியற்றவைகளா யிருக்கின்றன. ஆகையினால்தான் இந்த ஜ்வரம் குளம் குட்டைகளைச் சுற்றிய விடங்களில் அதிகமாய் வியாபிப்பதாகக் காணப்படுகிறது. சென்னப்பட்டணத்தில் எங்கும் கோயில்களுக்கு அடுத்து அனேக குளங்கள் இருப்பதால் இந்த ஜ்வரம் பட்டணம் முழுமையும் பரவியிருக்கின்றது. அதிலும் மற்ற வெளியிடங்களை விட குளங்களுக்கு மிகவும் அருகிலுள்ள இடங்களில் வாஸம் செய்பவர் இந்த ஜ்வரத்தினால் விசேஷமாக பீடிக்கப்படுவது ஸஹஜம்.

ஒருவருக்கு இந்த ஜ்வரம் உண்டாவதற்கு இரண்டு காரணங்களுண்டு. (1) ஜ்வரத்துடன் வருந்துகிற ரோகியின் ஸமீபத்திலிருப்பது. (2) அனோபிலஸ் என்கிற கொசுக்கள் சுற்றிலும் வியாபித்திருத்தல். இவ்வித கொசுக்கள் சுவர் முதலானவற்றில் உட்காருகையில் அவற்றின் உடல் சுவரோடு படியாமல் தூக்கிக் கொண்டிருக்கும்; இந்த அடையாளத்தைக் கண்டு அனோபிலஸ் என்னும் கொசு ஜாதியை எளிதில் அறிந்து கொள்ளலாம். வேறு ஜாதியான கொசுக்கள் சுவரில் உட்காரும்போது அவற்றின் உடலும் சுவருடன் படிந்திருக்கும்; அவற்றின் முதுகு பாகம் சிறிது கூனுடையதாகவும் காணப்படும். சுவரில் படிந்துட்காரும் இவ்வித கொசுக்கள் க்யுலெக்ஸ் (Culex) என்று சொல்லப்படுகின்றன. நம்முடைய வீடுகளில் ஏராளமாய் வியாபித்திருப்பது இந்த ஜாதியே. ஆகையால், ஒவ்வொரு பிணியாளியையும் கொசு வலைக்குள் இருக்கச் செய்து, இக்கொசுக்களின் வாய்களுக்கு அகப்படாமல் ஜாக்கிரதையாயிருக்கச் செய்வதே இந்தஜ்வரத்தைப் போக்குவதற்கு உத்தமமான வழியாகும். ஏனெனில், இக்கொசுக்கள் எவ்விடங்களில் கடிக்கின்றனவோ அவ்வழிகளாலேயே ரோகியின் இரத்தத்திலுள்ள ஜ்வரத்தை யுண்டாக்கும் விஷப்பூச்சிகளை அவற்றின் உடம்புகளுக்குள் ஏற்றுக்கொள்கின்றன. இவை மற்றொருவனைக் கடிக்கும்போது இவ்விஷத்தை அவன் இரத்தத்தில் சேர்த்துவிடுகின்றது. ரோகிகளுக்கு இவ்வித ஏற்பாடு செய்ய முடியாவிட்டால், ஜ்வரமில்லாதவராவது கொசுவலைகளுக்குள் படுத்துக் கொள்வது நலம். ஒருவனுக்கு அடிக்கடி ஜ்வரம் வந்தால் கொஞ்சகாலமேனும் அவ்விடத்தைவிட்டு வெளியூருக்குப் போயிருந்து, மறுபடியும் காய்ச்சல் வராதபடி உடம்பை பலப்படுத்திக் கொள்வது அவசியம். ஒவ்வொரு நாளும் சாக்கடைகளை நன்றாகக் கழுவி, வீட்டையும் வெகு சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். இல்லாவிடின், கொசுக்கள் அதிகமாய், அவற்றின் தொந்தரவினால் தூக்கம் குறைந்துபோய், உடம்பின் வலிவு குறைந்து, ஏதாவது மலேரியாவையுண்டாக்கும் கொசுக்கள் ஒருவேளை கடித்தாலும், அந்த ஜ்வரம் வராதபடி அதை எதிர்க்கவும் சக்தியற்று, எளிதில் விஷமஜ்வரத்திற்கு ஆளாகவேண்டிவரும்.

ஒருவனுக்கு ஜ்வரம் வந்தால், படிக்காத நாட்டு வைத்தியனிடமாவது, கைதேர்ந்த இதர வைத்தியரிடமாவது மருந்து ஸாப்பிடுகிறான். படிக்காத வைத்தியனிடம் வாங்கிக்கொள்ளும் மருந்தால் காய்ச்சல் நிற்பதில்லை. ஒவ்வொரு நாளும் ஜ்வரம் வந்துகொண்டே யிருக்கும். பிறகு அவனுக்கு ஜ்வரமனுபவிப்பது வழக்கமாய் விடுகிறது. அதனால் ஜ்வரம் வருவதும் வராததும் தெரிவதில்லை. ஆகையால் தினந்தோறும் ஜ்வரம் வந்து கொண்டே யிருந்தாலும், அதை காந்தை யென்று நினைத்

துக்கொண்டு ஸாதாரணமாய் தினப்படியுள்ள காரியங்களைப் பார்ப்பதிலேயே கருத்தாயிருந்து விடுகிறான். ஒவ்வொரு தினமும் மாலை நேரத்தில் உடம்பு பலஹீனமாயும் கண்ணெரித்தலும் இருப்பதாகத் தோற்றுவதைத் தவிர்த்து, தனது நிலைமையைப்பற்றி வேறொன்றும் கவனிப்பதில்லை. பிறகு முகம் வெளுத்துப் போகும்; பசி தீபனமும் இராது. இப்படியிருக்கையில் ப்ளீஹமும் (Spleen) பெரிதாய் வரும். அதனால் வயிறும் பெரிதாகும். இரத்தம் குறைந்துவிடும்: அதாவது இரத்தம் ஜலம் மாதிரியாய் விடுகிறது. இவ்விதம் பிரயோஜனமில்லாத நிலைமைக்கு வந்தபின், கைதேர்ந்த வைத்தியனிடம் போவது வழக்கம். பிறகு அவ்வைத்தியன் என்ன செய்வான்! எவ்வளவு நல்ல மருந்தைக் கொடுத்தபோதிலும் ரோகியானவன் அதை ஏற்றுக்கொள்ள சக்தியற்றவனாகிறான். ஆனால், இத்துன்பமெல்லாவற்றையும் ஒரு சிறு உபாயத்தினால் விலக்கி விடலாம். ஒவ்வொருவரும் தர்மாமீடர் என்கிற கருவியைக்கொண்டு தனக்கு ஜ்வரம் இருப்பதையும் இல்லாததையும் அறிந்துகொள்ளலாம். ஜ்வரமில்லாமல் உடம்பு ஏதோ காங்கையாயிருப்பதாகத் தோற்றினால், அப்பொழுது இக்கருவி சூடு அதிகமாயிருப்பதைக் காட்டாது; ஜ்வரமாயிருந்தால் சூடு அதிகமாயிருப்பதை நன்றாகக் காண்பிக்கும். இக்கருவியினால் ஜ்வரமிருப்பதாகத் தெரிந்தால், உடனே தகுந்த வைத்தியனிடத்தில் காட்டி நல்ல மருந்தை வாங்கி உபயோகித்தால், இவ்வித துன்பங்களை அனுபவிக்காமல் ஸுகம் பெறலாம்.

வேறு சிலர் நல்ல வைத்தியரிடம் முன்னதாகவே வைத்தியம் செய்துகொள்ள முயன்றாலும், மற்றொரு வழியில் தங்களுடைய ஜ்வரத்தைத் தீர்த்துக்கொள்ள வகையற்றவர்களாகிறார்கள். ஜ்வரம் வந்ததும் நல்ல வைத்தியரிடம் செல்பவருக்கு, அவர்கள் கொடுக்கும் மருந்தால் ஜ்வரம் சீக்கிரம் நின்றுவிடும். ஆனால் மருந்தை அப்பொழுதே நிறுத்திவிடும்படி வைத்தியர் சொல்வதில்லை. ஆகிலும், ஜ்வரம் அடியோடு நின்றுவிட்டதென்று நினைத்து ஔஷதத்தை அப்புறம் வாங்கிக் கொள்வதில்லை. பிறகு அவனுக்குநேரிடுவதென்ன? பத்துப்பதினைந்து நாட்கள் காய்ச்சல் இல்லாதது போலிருந்து, மறுபடியும் வந்து விடுகிறது. அப்படி வருவானேன்? இந்த ஜ்வரம் ஸூக்ஷ்மமான சில பூச்சிகளால் வருவதாக முன்னமே சொன்னோம். அந்த விஷப்பூச்சிகளில் ஒன்று உடம்புக்குள் தங்கியிருந்தாலும் ஜ்வரம் அடியோடு வாசியாவதில்லை. உட்கொண்ட ஔஷதம் முதலில் அனேகம் பூச்சிகளை அழித்துவிடும். ஆனாலும் சிலது அழிக்கப்படாமலும் இருக்கும். ஆகையால் முதலில் சில நாள் ஜ்வரம் வராமலிருந்து, பிறகு மிகுந்துள்ள பூச்சிகள் விருத்தியானவுடன், மறுபடியும் ஜ்வரம் வரத் தொடங்குகிறது. மிகுந்துள்ள விஷப்பூச்சிகளும் அழிக்கப்பட்டாலொழிய மறுபடியும் ஜ்வரம் வராதென்று சொல்லுவதற்கில்லை. மறுபடி விஷப்பூச்சிகள் இரத்தத்தில் அதிகரித்து ஜ்வரம் வரும்போது, வைத்தியரிடம் சென்று இரண்டொரு நாள் மருந்தை வாங்கிக்கொண்டு மீண்டும் அவன் முன் போலவே நின்று விடுகிறான். அப்பொழுதும் வேண்டியவளவு மருந்தை நீடித்து உபயோகிக்காமையால், விஷப்பூச்சிகள் சில அழிக்கப்படாமல் முன்போலவே இரத்தத்தில் தங்கியிருந்து காலவளவில் ஜ்வரத்தை விருத்தி செய்யும். ரோகிக்கு நல்ல வைத்தியரிடமும் இதனால் நம்பிக்கைக் குறைந்து விடுகிறது. பிறகு, ஸாதாரண அறியாத வைத்தியனிடம் சென்று, அவனிடம் தகாதவிதமாய் ஏதேதோ மருந்துகளை வாங்கி உபயோகித்து, அவற்றாலும் பிரயோஜனம் ஒன்றும் ஏற்படாமல் தாறு

மாறாய் கெட்டுப்போகிறான். ஆனால் வைத்தியர் எல்லோரும் இப்படி அறியாதவர்களென்றாவது, இவ்விதம் செய்பவரும் தெரிந்து மனப்பூர்வமாய் செய்கிறார்களென்றாவது நான் சொல்லப் புகுந்தவனல்ல. தகுந்த யோக்யதையுள்ள வைத்தியரிடம் சென்று, வைத்தியர் சொல்லுகிற விதமாகவே நல்ல சிகிச்சை செய்து கொள்வதில் முன் ஜாக்கிரதையும் கவலையும் இருக்கவேண்டியது மிகவும் அவசியமென்று அறிவிக்கவே இவ்விதம் எழுதுகிறேன். சிலரிடம் நல்ல ஔஷதங்கள் இருக்கும்; ஆனால் அவற்றை வைத்துக்கொண்டிருப்பவர் மிக நாடோடியான வைத்தியராயிருந்தால், அவற்றின் குணங்களும் எந்தெந்த ரோகங்களில் எவ்வெவ்விதம் உபயோகிக்க வேண்டுமென்பதையும் அவர்கள் அறியார்களாகையால், அவர்களிடம் ஜ்வரம் முதலியதற்கு மருந்து வாங்கிக் கொள்வதே அபாயகரமாகும். அனேக பெரிய ரோகங்கள் ஆரம்பத்தில் சிறு வியாதிகளாகவும் தோற்றும். எவ்வளவு சிறிய வியாதியானாலும் சிறந்த அனுபவசாலிகளான வைத்தியர்களிடம் சிகிச்சை செய்து கொள்வதே மிகவும் நலம்.

கலா-அஜார் (Kala-azar) என்று இப்பொழுது சென்னையில் விசேஷமாய் வியாபித்துவருகிற விஷஜ்வரம் ஒன்றுண்டு. இதைப் பற்றி வரப்போகிற ஸஞ்சிகைகளில் விவரமாயெழுதுவோம்.

INFANT FEEDING.

குழந்தைகளுக்கு உணவூட்டல்.

BY

DR. V. G. DESAI, M. B. (LOND.)

(Narmada Bhai Hospital, Bandra)

சிறு குழந்தைகளுக்கு உணவூட்டும் வகைகளைப் பற்றிய அறிவானது புஸ்தகங்களைப் படிப்பதால் ஒருவாறு ஏற்படலாம். ஆனால் குழந்தைகளை ஆஹாரம் ஊட்டி வளர்ப்பதைப் பற்றி அனுபவத்தினாலேற்படும் அறிவை நன்கு விளக்குவது மட்டும் வெகு கஷ்டம். வியாதியினால் வருந்தும் குழந்தைகளை நேரில் பார்த்துக்கொண்டும், பரிபக்குவமான அனுபவத்தைப் பெற்றுள்ள சிறந்த வைத்திய வித்வானிடமிருந்துகொண்டும் அவ்வித அறிவைப் பெறுவது ஸாத்தியமாகும்.

வளரும் குழந்தை ஆரோக்யநிலைமையில் இருப்பதையும் அவ்விதமில்லாததையும் நிர்ணயிக்க அடியில் வரும் குறிப்புகளை அவசியம் கவனித்து வரவேண்டும்:—

1. குழந்தையின் மலத்தைக் கவனிப்பது: ஸாதாரணமாக குழந்தையின் மலம் நன்கு கட்டியாயில்லாமலும், துணியை விட்டு எளிதில் பிரிந்து விடக் கூடாததாயுமிருக்கும். கோழிமுட்டையின் மஞ்சட்கருவைப் போல் துணியில் ஒருவித மஞ்சள் நிறமான கறையையும் அது உண்டாக்கும்.

2. அதற்குண்டாகும் பசி எவ்விதமாயிருக்கின்றதென்பதை ஊக்கத்துடன் பார்த்து வரவேண்டும். திருப்தியுடன் பாலுண்ணுகிறதா, அல்லது ஆரோக்யநிலைமைக்கு மாறாகக் குடிக்கின்றதா என்பதையும் அவசியம் கவனிக்க வேண்டும்.

3. நாளுக்கு நாள் குழந்தையின் நிறை விருத்தியாய் வருகிறதா, குறைந்து வருகிறதா என்பதையும் அடிக்கடிப்பார்த்துவரவேண்டும்.

4. குழந்தைக்குண்டான மற்ற நிலைமைகளும் கவனிக்கப்படவேண்டும்: விளையாட்டில் ஊக்கமுள்ளதாயிருப்பதும், வெளியில் நடக்கும் விஷயங்களைப் பார்க்க நாட்டமுள்ளதாயிருப்பதும், நன்றாகத் தூங்குவதும் கவனிக்க வேண்டிய விஷயங்களாம்.

எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லா நிலைமைகளுக்கும் ஏற்ற விதிகளை ஏற்படுத்துவதென்

ருல் அது கஷ்டம். மேற்கூறிய குறிப்புகளை நன்றாகக் கவனித்து வந்தால், எந்தவிதமான உணவு எந்த குழந்தைக்கு ஏற்றதாகுமென்று ஒருவாறு நிர்ணயிக்கலாம். நல்ல ஆரோக்ய நிலைமையிலுள்ள குழந்தைகள் எவ்வித உணவை விசேஷமாய் ஏற்றுக்கொள்ளக் கூடியதென்பதை அறிய வேண்டுமானால், அந்தந்த குழந்தைகளின் இயற்கைத்தன்மை எவ்விதமானதென்பதை அறிவதிலும் வைத்தியனுக்குப் பழக்கமிருக்க வேண்டும். நல்ல நீரோகமான நிலைமையிலுள்ள குழந்தைகள் எவ்வளவு கடினமான ஆஹாரத்தையும் ஆவலுடன் உண்ண விரும்பும். ஒரு குழந்தைக்கு ஏற்றதான ஆஹாரம் சில ஸமயத்தில் வேறு குழந்தைகளுக்கும் தகுந்தவைகளாயிருக்குமென்று மட்டும் ஒருவன் நிர்ணயிக்கக் கூடாது. ஒரு குழந்தை கொழுப்பை நன்கு ஜீர்ணம் பண்ணிக்கொள்ளக் கூடிய சுபாவமுள்ளதாயிருக்கலாம்; மற்றொன்றுக்கு சர்க்கரையே விசேஷமாயேற்றதாகலாம்; வேறொன்று முட்டையின் வெள்ளைக்கருவின் ஸத்துபோன்ற ப்ரோடீட் (Proteid) என்பதை ஜீர்ணமாக்கிக் கொள்ளக்கூடும்; ஆகையால் இவையெல்லாவற்றிலும் ஒவ்வொரு குழந்தையையும் தனித் தனியாக அதனதன் தன்மையை அறிந்து உணவு விஷயத்தை கவனித்து வரவேண்டும். ஏதேனும் போஷணா சக்தியுள்ள உணவை குழந்தைகள் நன்கு ஜீர்ணம் பண்ணிக்கொள்ளக் கூடும், அல்லது அவ்வித உணவு அவைகளுக்கு அவசியமானது என்கிற விஷயத்தைமட்டும் அதிக காலம் அனுபவமில்லாத வைத்தியர்கள் அறிவார்கள். ஆனால், குழந்தைக்கு ஏதாவது ஓர் அவயவம் நோய் கொண்டிருந்தால், அந்நிலைமையானது அவ்வுணவை ஜீர்ணம் பண்ணிக்கொள்ளும் சக்தி அக்குழந்தைக்கு இல்லையென்பதை அறிவிப்பதாகும். குழந்தையின் நிறை விருத்தியாகாமலிருந்தாலும், அல்லது நிறை குறைந்து வரத் தலைப்பட்டாலும், வைத்தியன் அக்குழந்தையின் தேஹத்தைப் பரீக்ஷிப்பதில் தனது அறிவையும் அனுபவத்தினாலுண்டான திறமையையும் கூடுமான வரையிலுமுபயோகிக்க வேண்டும்.

சிசுக்களை முலைப்பாலூட்டி வளர்ப்பதே அவற்றிற்கு அகால மரணம் நேரிடாமலிருக்கச் செய்வதற்கு முக்கிய உபாயமாம். தாய் ஆரோக்ய நிலைமையிலிருந்தால், குழந்தைகளுக்கு முதலில் ஒன்பது மாதம் வரையில் முலைப்பாலையே கொடுத்துவரவேண்டும்; இல்லையேல் தகுந்த தாதியைக் கொண்டாவது முலைப்பாலூட்ட வேண்டியது. இப்பொழுது பெரிய பட்டணங்களில் முக்கியமாய் நாகரிகத்திற் சிறந்த ஜனங்களில் ஸ்த்ரீகளுக்கு முலைப்பால் வற்றிவிடுவதும் அல்லது வற்றச் செய்வதும், அதனால் குழந்தைகள் முலையுண்ணாமலிருப்பதும் வழக்கமாய் விட்டது. இவ்விதமாக வளர்க்கப்படும் குழந்தைகளுக்கு நன்கு தேஹத்தின் நிறையும் வன்மையும் விருத்தியாவதில்லை. இவ்விதமான குழந்தைகளுக்கு மலமானது நல்ல இலைப்பசுமை அல்லது மஞ்சள் நிறமுள்ளதும், சீதக்கட்டுடன் கூடியதுமாய் அடிக்கடியும் கழியும். பாலுக்குள்ள கழிவுப்பொருளும் அந்த மலத்தில் வெகு சொற்பந்தானிருக்கும். இந்த நிலைமையைக் கண்டு குழந்தைக்கு அதிஸாரமுண்டானதாக சிலர் பிரமிப்பார்கள். ஆனால் அது அதிஸாரமல்ல. இவ்விதம் பேதியாவதால், குழந்தை முலைப்பாலில்லாமல் பட்டினியினால் வருந்துவதாய் அறியவேண்டும். குழந்தை பஞ்சத்தில் அடிபட்டது போலிருப்பதுடன் மிகவும் சொற்பமான நிறையுள்ளதாகவுமிருக்கும். முலையூட்டியவுடனே ஒவ்வொரு தடவையும் அரை அவுன்ஸ் வடிக்கட்டிய கஞ்சியைக் கொடுப்பது நலம்.

குழந்தை நன்கு செழித்து வரவர வளர்ந்து வருவதாகத் தோற்றினால், உலர்ந்து பொடியான பாலுள்ளது அல்லது அவ்வித பாலில்லாததும், மால்டோஸ் என்னும் ஒரு வகையான கஞ்சியின் ஸத்துள்ளதுமான பலவிதமான செயற்கையுணவுகளில் ஏதேனும் ஒன்றைச் சிறிதளவு கொடுத்து வருவதும் நல்லதென்று சிலர். பட்டினியாகப் போடுவதால் குழந்தைகளுக்கு ஒருவித அதிஸாரம் உண்டாவதைத் தடுக்க மறுபடியும் கிரமமாக முலைப்பாலை யூட்டிவரவேண்டும். முலையூட்டுவதற்கு முன்னும் அதன் பின்னும் ஒவ்வொரு தடவையும் குழந்தையை நிறுத்தால், அது எவ்வளவு பால் அருந்தியதென்பது நன்றாக் அறியப்படும்.

ஒரு குழந்தைக்குக் கொடுக்கப்படும் முலைப்பால் மிகவும் குறைவாயிருந்தாலும், மிதமிஞ்சி உணவூட்டி வந்தாலும் ஜீர்ணசக்தி பலவிதமான மாறுபாடுகளை யடைந்து, இறுதியில் போஷணசக்தியுள்ள நல்ல உணவுகளை சிறிதளவும் ஏற்றுக்கொள்ள சக்தியற்றதாய் விடுகிறது.

அரை வயிற்றுக்கும் போதாமல் ஆஹாரம் ஊட்டுவதால் குழந்தைகளுக்கு மலபந்தமுண்டாவதும், பிறகு அதற்காக வீணில் மதியின்றி மருந்துகளைப் போட்டுவதும் மற்றொரு விதத்தில் தீங்குகளை யுண்டாக்குகின்றன. முலைப்பாலில் இயற்கையாகக் கலந்திருக்க வேண்டிய வஸ்துக்கள் முறைதவறி வெவ்வேறு விதமாகக் கோளாறடைந்திருந்தால், அவ்விதமான முலைப்பால் சில வேளை அநேக வகையான ரோகங்களை யுண்டாக்கும். தாய்ப்பாலில் கொழுப்பு வஸ்துக்கள் அளவு மீறியிருந்தால் அவை அதிஸாரத்தை யுண்டாக்கும். சில ஸமயங்களில் அதிக தித்திப்பான பாலில் சர்க்கரை விசேஷமாயிருக்குமாகையால், அதனால் குழந்தைக்கு சொறி சிரங்குகள் உண்டாகும். குழந்தைக்கு எலும்புகள் திடமடையாமல் அஸ்த்திகமனம் (Rickets) என்கிற ரோகம் உண்டானால், அப்பொழுது தாய்ப்பாலில் இருக்கவேண்டிய உப்புவகைகள் அளவில் மிகவும் குறைந்திருப்பதாய் அறிய வேண்டும். சிலருக்கு முலைப்பால் மேன்மேலும் மிகுதியாகச் சுரக்கும்; ஆனால் அதை வெண்ணெ[illegible]மான தண்ணீரென்றே சொல்ல வேண்டும். அதனால், குழந்தை முலையுண்ணும் பொழுது கேவலம் தண்ணீரையே மிகுதியாகக் குடிக்கின்றதென்னலாம். அக்குழந்தைகளுக்கு ஜலமஸ்தகம் (Hydrocephalus) என்கிற ரோகமும், பிராணாபாயமான மார்ச்சளி ரோகமும் ஸாதாரணமாய் உண்டாகக் கூடும். மேற்கூறிய விவரங்களால், முலைப்பால் எவ்வித நிலைமைகளிலும் ஒரேமாதிரியாய் குணந்தரக் கூடியதாயிராதென்பதைக் கவனிக்க வேண்டும். குழந்தை தகுந்த விதமாய் வளராமலிருந்தால், அப்பொழுது நீர்ப்பொருளின் குருத்வமறியக்கூடிய கருவியைக் கொண்டும், (Hydrometer) ஸூக்ஷ்மதர்சனயந்திரத்தைக் கொண்டும் தாய்ப்பாலை பரீக்ஷிப்பது உத்தமம்.

குழந்தைகளுக்கு வழக்கமாய் கொடுக்கப்பட்டு வருவது பசுவின் பால். உண்மையில் அது நல்ல உணவுதான். ஆனால் பசுவின் பாலில் சேர்ந்திருக்கும் கலவைப் பொருட்களின் அம்சங்களாலும், குருத்வத்தாலும் அது தாய்ப்பாலை விட சிறிது மாறுபாடடைந்திருக்கின்றது. ஆகவே தகுந்த அளவு ஜலத்தைச் சேர்த்து அந்தப்பாலை விளாவி, அதில் சர்க்கரையையும் சிறிது சேர்க்க வேண்டியது அவசியம். பசுவின் பாலையும் கூடுமான வரையில் தாய்ப்பாலுக்கு ஏற்றவிதமாகச் செய்யவேண்டியது. ஆனால் பாலிலுள்ள கலவைப் பொருட்கள் (Chemical compounds) எவ்விதமிருக்கின்றன என்பதில் விசேஷமாய் அடிக்கடி

ரீக்ஷை செய்வதில் பெருமுயற்சி யெடுத்துக்
கொள்ள வேண்டியதில்லை. ஐரோப்பியர் இவ்
விஷயத்தில் செய்யும் கற்பனைகள் பெரும்
பாலும் வெகு சீதளமான தேசங்களுக்
கும், அவர்களைப் போன்ற ஜாதியாருக்
கும் தகுந்தவைகளாமென்றறிய வேண்
டும். பசுவின் பாலிலும் தாய்ப்பாலி
லும் ப்ரோடீட் (Proteid) *என்னும் வஸ்து
இரண்டுவிதமுண்டு; அவற்றில் ஒன்று
கேஸீன் (Casein) என்றும், மற்றொன்று
லாக்டோ அல்ப்யூமின் (Lacto-albeumen)
என்றும் சொல்லப்படுகிறது. இரண்டாவது
கூறிய லாக்டோ அல்ப்யூமின் என்கிற ப்ரோ
டீட் பசுப்பாலிலும் முலைப்பாலில் அதிகமா
யிருக்கிறது. முலைப்பாலில் இவ்விதம்
ப்ரோடீட் சிறிது வித்தியாஸப்படுவதால், இது
பசும்பாலை விட சீக்கிரத்தில் நன்றாய் ஜீர்ண
மாகின்றது. மேலும் முலைப்பாலிலுள்ள
லாக்டோ அல்ப்யூமின் என்பது, பால், குடலில்
திரள்திரளாகக் கட்டிக்கொள்ளாமல் அதை
தகுந்த நிலைமையில் வைத்திருக்கும். பசும்
பாலில், கேஸின், முலைப்பாலிலும் விசேஷமாய்
இருப்பதால், நன்கு உறைந்து தயிராகின்றது.
லாக்டோ அல்ப்யூமின் என்பது வெகு
எளிதில் ஜீர்ணமாகக் கூடியதாயிருப்பதாலும்,
மிகவும் உபயோகமான நல்ல ப்ரோடீட்
என்னும் பதார்த்தத்தின் ஸாரம்சமாயிருப்
பதாலும், தாய்ப்பாலானது குழந்தைகளுக்கு
மிகவும் ஏற்றதாயிருக்கின்றது. முலைப்பாலி
லுள்ள கொழுப்பு வஸ்துக்கள் ஒலின்
(Olein) என்கிற நீரான நிலைமையிலிருக்கும்
திணப்பொருளானதால், அவை சீக்கிரம் ஜீர்ண
மாகக் கூடியன. பசுவின் பாலிலுள்ள கொழுப்பு
கள், கட்டியான ஸ்டீரின் (Stearin) என்கிற
திணப்பொருளாகவும், படிகம் போல் திரண்ட
பல்மிடின் (Palmitin) என்கிற நிலைமையிலும்
சேர்ந்திருக்கின்றனவாகையால், இவை எளிதில்
சிறு குழந்தைகளுக்கு ஜீர்ணமாகா. பசுவின்
பாலிலும் முலைப்பாலிலும் கொழுப்புகள் 100
இல் 4 பங்காய் ஒரே அளவாகச் சேர்ந்திருந்
தாலும், இக்கொழுப்புகளின் தன்மை மேற்
கூறியவாறு பல வகைகளில் வித்யாஸப்படு
வதால், முலைப்பாலைப் போல் பசுவின்பால்
எளிதில் ஜீர்ணமாகாததுடன், சில ஸமயங்
களில் அதிஸாரத்திற்கும் காரணமாகின்றது.

தற்காலத்திய நாகரிகவைத்தியர்களின்
கொள்கைப்படி, கொழுப்புகளாலுண்டாகும்
புளிப்பின் ஸம்பந்தத்தினால் மிகுதியாய்
ஆமாசயமென்னும் இரைப்பையினுடைய
கோளாறுகள் உண்டாகாமலிருப்பதற்காக,
பசுவின் பாலிலுள்ள கொழுப்புகள் முலைப்
பாலிலிருப்பதை விட இன்னும் நீரான
நிலைமையடையும் விதமாய் அதை அவசியம்
விளாவ வேண்டியிருக்கிறது. ஆனால் தாய்ப்
பாலிலும் பசுவின் பாலிலும் கொழுப்பு வஸ்
துக்கள் அப்போதைக்கப்போது அளவில்
வெவ்வேறு விதமாக மாறி வருவதுமுண்டு;
ஒரு தடவை முலையுண்ணுகையிலேயே, முத
லில் உட்கொள்ளப்படும் பாலில் கொழுப்பு
மிகவும் குறைவாயிருந்து, இறுதியில் உட்
கொள்ளப்படுவதில் நிரம்பவும் இருக்கக்கூடும்.
சிறு குழந்தைகளில் அனேகம் கொழுப்பை
ஏற்றுக் கொள்ளாதவைகளாகவும், அதிக
கொழுப்புள்ள பால் முதலியதை உட்கொள்வ
தாலுண்டாகும் அஜீர்ணரோகத்தினால் வருந்
துபவைகளாகவும் காணப்படுகின்றன. அவ்
வித அஜீர்ணத்தினால் பசி மந்தித்து வயிற்றுப்
பொருமலு முண்டாகும்; உணவைக் கொ
டுத்தபின் அரைமணி நேரத்திற்குள்ளாக வாந்

* ப்ரோடீட் என்பது, பிராணவாயு, (Oxygen)
இலவணவாயு (Nitrogen), ஜலவாயு (Hydrogen),
கரியமிலவாயு (Carbonic acid gas), •திமுறகற்
பாஷாணம் (Phosphorous), கந்தகம் இவை சேர்ந்த
தும் சரீரத்தைப் போஷிப்பதற்கு முக்கியமானது
மான சிறந்த வஸ்து.

தியுமாகும்; மலமானது வெளுத்தும் பசையற்றும் துர்நாற்றமுடைய தாகவுமிருக்கும்; நன்ருக நித்திரையும் உண்டாகாது; தேஹத்தின் நிறமும் பாண்டுரோகம் வந்ததுபோல் வெளுத்திருக்கும்; சரீரம் நன்கு செழித்தும் வளராது. குழந்தைகளுக்கு மிதமிஞ்சி பசுவின் பாலைக் கொடுப்பதால் மலபந்தமும் நேரிடுவதுண்டு. அப்பொழுது மலம் இறுகியும் வெளுத்தும் பெரிதாகத் திரண்டும் வெளிப்படும். பிறகு சீக்கிரத்திலோ காலக்கிரமத்திலோ அவ்வித மலபந்தம் அபாயகரமான குடல்வீக்கத்திற்குக் காரணமாகும். பாலில் சர்க்கரை அபரிமிதமாயிருந்தால், குடலில் புளிப்பு அதிகமாயுண்டாகும்; பாலிலுள்ள கேஸீன் என்னும் பதார்த்தத்தினல் இப்புளிப்பு ஒருவாறு மாற்றப்படுமாயினும், அதனல் எப்படியும் துர்க்குணம் ஏற்படாமலிராது.

கொதித்த வெந்நீர், மிகவும் திரவமான அரிசிக்கஞ்சி, ஆரோரூட் என்னும் கூவாக்கிழங்கு மாவின் கஷாயம் இவைகளில் ஏதேனும் ஒன்றைச் சேர்த்து பசுவின்பாலை விளாவி உபயோகிக்க வேண்டும். இறுதியிற் கூறிய இரண்டு கஞ்சிகளும் சரீரத்திற்கு வலிவு கொடுக்கக் கூடிய உணவுகளாயிருந்தாலும், அவை வெகு சொற்ப அளவில் வயதான பெரிய குழந்தைகளுக்கே ஊட்ட உதவும்.

விளாவும் அளவுகளைக் குறிக்கும் அட்டவணை.

மாதம்	பால்		ஜலம்
முதல் மாதம் வரையில்	1 பங்கு	...	2 பங்கு
மூன்ரும் ,,	1 ,,	...	1 ,,
நான்காம் ,,	1 ,,	...	½ ,,
ஐந்தாம் ,,	1 ,,	...	⅓ ,,

ஐந்தாவது மாதத்திற்குப் பிறகு பாலை விளாவாமலே கொடுத்து வருவது நலம். அப்படி விளாவாமலுபயோகிக்கும் பாலில் ஒரு அவுன்ஸுக்கு இரண்டு நெல்லெடை அளவு கொண்ட ஸோடியம் ஸிட்ரேட் (Sodii citras) என்னும் உப்பைக் கரைத்து உபயோகிப்பது மிகவும் நல்ல முறை. இவ்வுப்பானது கேஸீனென்னும் ப்ரோடீட் வஸ்து கட்டியாவதைத் தடுத்தும், அதை மிக மெதுவாகச் செய்தும் எளிதில் ஜீர்ணமாக்குவதுமல்லாமல், பால் புளிக்காமலிருப்பதற்கும் ஹேதுவாகும். விளாவிய பசுவின் பாலில் ௨௰ அவுன்ஸுக்கு அரை தேக்கரண்டி விதம் சர்க்கரை சேர்க்க வேண்டும். கருப்பஞ்சர்க்கரையைப் பார்க்கிலும் மில்க்ஷுகர் (Milk sugar) என்னும் க்ஷீரசர்க்கரையைச் சேர்ப்பது உத்தமம்.* பாலானது குழந்தையின் குடலில் போய், பக்குவமாய் ஜீர்ணமாக வேண்டியிருப்பதால், அது உண்டாகும் விதத்தையும், எவ்வித உணவுகளை கறவைப் பசுக்களுக்குப் போடுகிறார்களென்பதையும் கவனிப்பது அவசியம். பசுவுக்கு எப்பொழுதும் புல்லைமட்டும் தீனியாகப் போட்டு வந்தால், குழந்தைக்கு அதிஸாரமுண்டாகும்; அல்லது மிதமில்லாமல் கொழுப்புள்ள உணவுகளைப் போட்டால், குழந்தைக்கு மலபந்தமுண்டாகும். பாலை முதலில் விளாவி, பிறகு அதிலுள்ள நுண்ணிய ஜீவன்கள் (Bacteria) அடியோடு அழிந்து விடுமாறு நன்ருகக் கொதிக்க வைத்து, சுத்தமான பாத்திரத்தில் கொட்டி மூடி குளிர்ந்த இடத்தில் அதை வைத்திருக்க வேண்டும். சிறிது சூடாயிருக்கும்போதே குழந்தைக்குப் போடவேண்டும். ஆறிப்போன பாலை அப்போதைக்கப்போது கொஞ்சம் சூடேற்றி உபயோகிக்கலாம். ஒவ்வொரு தடவையும் பால் போட்டும்பொழுதே சர்க்கரையைக் கலக்க வேண்டுமேயன்றி, ஒரே தடவையில் எல்லாப் பாலிலும்

* பசும்பாலிலிருக்கும் நீரை ஆவியாக்கி எடுக்கப்படும் ஒருவித சிறந்த சர்க்கரை மில்க்ஷுகர் (க்ஷீரசர்க்கரை) எனப் படுகிறது. இதற்கு ஸாக்கரைன் (Saccharine) அல்லது ஸாக்கரம் லாக்டிஸ் (Saccharum Lactis) என்றும் பெயர் வழங்கப்படும், வெந்நீரில் தான் நன்ருகக் கரையும்.

ர்க்கரையை முன்னதாய் சேர்த்து வைக்கக் கூடாது.

பால் கொடுக்கவேண்டிய வேளைகளும் அளவுகளும்:—முதல் மாதத்தில் குழந்தைக்கு இரண்டு மணிக்கொருமுறை முலை யூட்டவேண்டும்; குழந்தை கைப்பாலைக்கொண்டு வளர்க்கப்பட வேண்டியிருந்தால், மேற் கூறிய விதமாக விளாவின பாலை வேளைக்கு இரண்டு அவுன்ஸுக்கு மேற்படாமல் இரண்டு மணிக்கு ஒரு தடவை போட்டி வரவேண்டியது. குழந்தை நித்திரை போக விருப்பமுள்ளதாயிருந்தால், அதை நல்லதனம் பண்ணியோ பயமுறுத்தியோ பலவந்தமாக அதற்குப் பாலூட்டுவது பிசகு. இராத்திரியில் 10 மணிக்கு மேலும் 5 மணிக்கு முன்பாகவும் குழந்தைக்கு எவ்வுணவும் கொடுக்கக் கூடாது. குழந்தை என்றையதினம் பிறந்ததோ, அன்று முதலாக அதற்கு இவ்வழக்கத்தை உண்டுபண்ணவேண்டும். இதன் மத்தியில் அழுதால், அவ்வழுகையை இரண்டொரு நாள் கவனிக்காமலிருக்க வேண்டியது. இரண்டு மூன்று நாள் இவ்விதம் செய்து வந்தால், பிறகு அழுவதில் பிரயோஜனமில்லை யென்று அனுபவத்தில் சுயமாய் அறிந்து, இரவில் நன்றாக நித்திரைபோகவிரும்பும். பிறகு மூன்றாவது முதல் ஐந்தாவது மாதம் வரையில் முன் சொல்லிய விதம் விளாவிய பாலை ஒரு வேளைக்கு மூன்று அவுன்ஸ் விதம் மூன்று மணிக்கு ஒரு முறை ஊட்டி வரவேண்டியது. அப்பால், ஒன்பதாவது மாதம் வரையில் விளாவாத சுத்தமான பாலை ஐந்து அவுன்ஸுக்கு அதிகப்படாமல் நாலு மணிக்கு ஒரு தடவை போட்டி வரவேண்டும்.

தாய் நோயுள்ளவளாயிருந்தால், அக்குழந்தைக்கு முலையூட்டுவதற்கு ஆரோக்ய நிலைமையிலுள்ள ஒரு தாதியை ஏற்படுத்த வேண்டும். நோய்கொண்டவளுடைய குழந்தைக்கு என்ன வயதோ, அதே வயதில் தாதிக்கும் குழந்தையிருக்கவேண்டும், தாதிக்குக் குழந்தை பிழைக்கிராவிடில் அவள் பிரயோஜனமுள்ளவளாகாள். முலை கொடுக்கும் தாதிக்கு அதற்கு முன் வழக்கமில்லாத ஆஹாரங்களை அதிகமாய் போட்டு, அவளைக் கொழுக்கச் செய்யும் ஒரு கெட்ட வாடிக்கை தனிகர்களின் வீட்டில் பொதுவாக அனுஸரிக்கப்பட்டுவருகிறது. இது குழந்தைக்குக் கொடியவியாதிகளை யுண்டாக்கக் கூடிய வழக்கமேயன்றி வேறல்ல. தாதிக்கு எப்பொழுதும் வழக்கமான ஆஹாரம் எதுவோ அதைத் தவிர வேறு எதையும் கொடுக்கக் கூடாது. அவளுக்கு வழக்கமான ஸாப்பாட்டினாலேயே பால் நன்றாக வேண்டியவளவு சுரக்கும். விசேஷமான உணவுகளைக் கொடுக்காததால் தாதிக்கு முலைப்பால் குறைந்து விடுமோ என்று சிறிதும் சிந்திக்க வேண்டாம். உங்களுடைய குழந்தைக்கு முலையூட்ட தாதியை அமர்த்திக் கொள்வதற்கு முன், அந்த தாதியின் குழந்தை அவளுடைய முலைப்பாலால் நன்கு போஷிக்கப்பட்டு வளர்ந்து வருவதைப் பார்த்தால், அவ்வித ஸந்தேஹம் உங்களுக்கு உண்டாகாது. ஐரோப்பிய வைத்திய புஸ்தகங்களில், வே (Whey) என்னும் ஒருவித மோரைக் குழந்தைகளுக்குக் கொடுக்கும்படி எழுதப்பட்டிருக்கிறது.* ஆகிலும் அவ்வித மோர் சிறு குழந்தைகளுக்கு ஏற்றதல்ல; எவ்வித குணம் அதனால் உண்டாவதாக அவ்

* குழந்தைக்குப் போட்ட வேண்டிய பாலை ஒரு இனாமல் பாத்திரத்தில் சேர்த்து நன்றாகக் காய்ச்சி, பிறகு ஸாதாரண சூடுள்ளதாய் (Blood-heat-98 F° to 100 F°) இருக்கையிலேயே ஒரு பத்தை எலுமிச்சம் பழரஸத்தைப் பிழிந்து நன்றாகக் குழப்பி, ஓரிடத்தில், கட்டியாகும் வரையில் அசையாமல் வைத்திருந்து, மறுபடியும் அதை ஒரு சிறு கரண்டியால் குழப்பி, மெல்லிய வெள்ளைத்துணியினால் வடிகட்டிக்கொள்ளவும். இந்த நீர் வே (Whey) என்பதாகக் கூறப்படுகிறது. எலுமிச்சம்பழத்திற்குப் பதிலாக ரென்னெட் (Rennet) என்னும் வஸ்துவை உபயோகிப்பது முண்டு.

வைத்தியர் அபிப்பிராயப்படுகிறார்களேர், அவ்விதம் அனேக முறைகளில் குணம் ஒன்றும் உண்டாகாமற் போவதுடன், அதை சரியானபடி பக்குவம் பண்ணி உபயோகிப்பதும் கஷ்டம். இவ்விதம் தயார் செய்யப்படும் மோரில் சர்க்கரையும்,உப்புகளும், பிணியினல் வருந்தும் குழந்தைகளுக்கு வேண்டிய அளவைவிட அதிகமாயிருக்கின்றன். ஒன்பதாவது மாதத்திற்குப் பிறகு, அல்லது நான்கு பற்கள் முளைத்த பிற்பாடு, பால் கொடுத்து வருவதுடன் சிறிது அன்னம், பருப்பு, நல்ல நெய் இவைகளையும் ஒவ்வொரு வேளை ஊட்டி வரலாம். மாம்ஸ முண்ணுபவராஞல், சிறிது வேகவைத்த முட்டை, பாலிற் செய்த பணியாரம் (Milk custard),மாம்ஸரஸம், உருளைக் கிழங்கு இவைகளைக் கொடுத்து வரலாம். குழந்தைகளுக்கு ஒன்பதாவது மாதத்திற்கு மேலும் பால்ஒன்றையே உணவாகக் கொடுத்து வருவது மிகவும் பிசகு. இந்த வயதுக்குப் பிறகு குழந்தையின் தாதுக்களுக்கு(Tissues) அயமும் பூமியிலுள்ள இதர உப்புவகைகளும் வேண்டியிருப்பதால், பால் மிகவும் அதிகமான அளவில் கொடுக்கப்பட்டாலன்றி, அயம் முதலிய வஸ்துக்கள் வேண்டிய அளவு குழந்தைக்குக் கிடைக்கா. இதன் பிறகும் இதர உணவுகளின் கலப்பின்றி பாலையே கொடுத்து வந்தால் அக்குழந்தைக்கு அஸ்த்திகமரும் (Rickets), பாண்டுரோகமும் உண்டாகும். அனேக குழந்தைகளுக்கு ப்ளீஹம் என்கிற மண்ணீரல் (Spleen) வீங்கிவிடுவது முண்டு. இப்பொழுது அனேக குழந்தைகளுக்கு காபி, டீ இவைகளை நாகரிக ஜனங்கள் குடிக்கக் கொடுத்து வருகின்றனர். இவை எவ்விதத்திலும் குழந்தைகளுக்குக் கொடுக்கத் தகாத வஸ்துக்களென்பதை இவர்கள் கவனிக்க வேண்டும்.

செயற்கையுணவுகள்:—ஸ்டார்ச்சு (Starch) என்னும் மாவு, மால்ட் (Malt) என்னும் பார்லியின் பாகு, டெக்ஸ்ட்ரின் (Dextrin) என்னும் ஒருவித பிசின், விசேஷமான சர்க்கரை இவைகள் * செயற்கையுணவுகளில் (Proprietary Foods) கலந்திருக்கும். இவைகள் பெரும்பாலும் சீக்கிரம் குடலில் ஊறி ஜீர்ணமாகக் கூடியவைகளே. செயற்கையுணவுகள் அற்புதமாய் சில குழந்தைகளின் சரீரத்தை நன்ருகச் செழிக்கச் செய்து உடலின் வன்மையையும் விருத்தி செய்யும். இவையெல்லாம் உண்மையே; ஆகிலும், அடிக்கடி ஒருவிதமான அஜீர்ணம் (Carbo-hydro Indigestion) அல்லது இரைப்பை வீக்கம் உண்டாவதற்கும், சீக்கிரத்தில் குழந்தையின் தேஹநிறை குறைவதற்கும் இவ்வுணவுகள் பெரும்பாலும் காரணமாகின்றன. இவ்விதவுணவுகளில் சிலவற்றைப் பாலில் கலந்தும் சிலவற்றைக் கலவாமலும் உபயோகித்து வருகிருர்கள். ஒரு தாயானவள் செயற்கை உணவுகளில் ஏதேனும் ஒன்றை தன் குழந்தைக்கு ஊட்டி, அதனல் குழந்தை நன்ருகச் செழித்து வளர்ந்து வந்ததாக மிகவும் புகழ்ந்து பேசுவதை நம்பி, மற்றவரும் அவ்வுண

* (1) உருளைக்கிழங்கு, வெள்ளிக்கிழங்கு, கோதுமை, பயறு முதலிய தானியங்கள், அனேக வித்துகள், மரப்பட்டைகள் இவைகளிலெல்லாம் உள்ள மாவு போன்ற பொருளை ஸ்டார்ச்சு (Starch)என்பார்கள். (2) வாற்கோதுமையை(பார்லி-Barley)முதலில் நனைத்து இருட்டறையில் அனல்கொண்டு முளைக்கும்படி குவித்து, முளைக்குந்தருணத்தில் அவற்றை வறுத்து, அதை ஒரு வாறு பாகுபோல் பக்குவம் செய்வதால் மால்ட் (Malt) உண்டாகும். (3) ஸ்டார்ச்சு விசேஷமாயுள்ள கஞ்சியில் சிறிது வினாவிய கந்தகதிராவகம் விட்டு, சொற்ப நேரம் காய்ச்ச, அது தடிப்பற்று மெலிந்த தண்ணீர் போலாகும்; இதிலுள்ள அம்லத்தை நீக்கப் போதிய ஸல்பேட் ஆப் லைம்(Sulphate of Lime)சேர்த்தால், அதில் ஸல்பேட் ஆப் லைமானது உப்பு போல் கலங்கி நிற்கும்; இதை வடிக்கட்டி, நீர்வற்றுந்தனையும் மெதுவாகக் காய்ச்சினல் பிசின்போன்றதாய் டெக்ஸ்ட்ரின் (Dextrine) என்கிற வஸ்து உண்டாகும்.

லவயே உபயோகிக்க விரும்புவது சரியல்ல. ஒரு குழந்தைக்கு ஒரு செயற்கையுணவு ஏற்றதாயிருந்தால் எல்லாக் குழந்தைகளுக்கும் அதுவே தகுந்ததென்று நிச்சயிப்பது அறியாத் தன்மையாகும். நீங்களும் அவ்விஷயத்தை நம்பிவிடவேண்டாம்; பிறரையும் கண்ணை மூடிக்கொண்டு நம்பச் செய்து இதர குழந்தைகளுக்கும் அவ்விதம் செயற்கையுணவை ஊட்டும்படி உபதேசிக்க வேண்டாம். ஒவ்வொரு மனிதனுடையவும் தேஹமனோபாவங்கள் ஸூக்ஷ்மமாகவோ ஸ்தூலமாகவோ ஏதோ சில மாறுபாடுகளடைந்திருப்பது அனைவரும் அறிந்த விஷயம்; அதுபோல் ஒரு குழந்தைக்கு அனுகூலமான ஒரு செயற்கையுணவு மற்றொரு குழந்தை இறப்பதற்கும் காரணமாகக் கூடுமென்பதை குழந்தையைப் பெற்ற ஒவ்வொருவரும் கவனத்தில் வைக்க வேண்டும். ஒன்பதாம் மாதத்திற்கு மேலும், வெளியிலேயே அரைவாசி ஜீர்ணமாயிருப்பதான இவ்வித உணவுகளைக் கொடுப்பதால், குழந்தைகள் ஜீர்ணசக்தியை பூர்ணமாய் பெறுவதற்கும், உண்டான சக்தியை உபயோகித்து வளர்வதற்கும் திறமையற்றவைகளாக ஆய்விடுகின்றமையால், இவ்விதம் ஒன்பது மாதத்திற்குப் பிறகும் அனுஸரிக்கப்படும் கண்மூடி முறையை நான் முற்றிலும் எதிர்ப்பவன். வயது வந்த குழந்தைகளுக்கும் இவ்வுணவுகளைக் கொடுப்பது, வேகமாய் நடக்கத் தகுந்த வலிவுள்ள கால்களையுடையவனுக்கு அக்குள் தாங்கி (Crutches) என்னும் பொய்க்காலைக் கொடுப்பது போலாகும். சரீரத்தின் இயற்கையானது, அந்தந்த அவயவத்தையும் சுறுசுறுப்பாக்கி, அதனதன் வேலைகளை முறைப்படி செய்யத் தூண்டும் போது, அவ்வவயவங்களுக்குத் தகுந்த வேலைகளை உற்றகாலங்களில் கொடுத்துவராமற் போனால் அவை காலகிரமத்தில் சுறுசுறுப்பற்று மந்தகதியாகப் போய், பிறகு என்றைக்கும் அதனதன் வேலையைச் செய்து கொள்ள மிகவும் திறமை யொழிந்தவைகளாய் விடும்.

சனமாகச் செய்த பால்:—இவ்வித பாலை கண்டென்ஸ்ட் மில்க் (Condensed Milk-வாந்த்ர க்ஷீரம்) என்பார்கள். இப்படி கனமாகச் செய்த பாலில் 100-க்கு 45 பங்கு சர்க்கரையும், 10 பங்கு ப்ரோடீன் என்கிற பொருளும், சில உப்புகளும் இருக்கும். இதை தகுந்த அளவில் விளாவிய பின், இதிலுள்ள கொழுப்பு வஸ்துக்களும் விளாவப் படுவதால் தீங்குண்டாவதில்லை. அழுக்கு முதலியவை சேர்ந்து கெட்டுப் போகாமலிருப்பதன்பொருட்டு மிகவும் ஜாக்கிரதையாய் வைத்துக் கொள்ள வேண்டும். இதில் சர்க்கரை அவ்வளவு அதிகமாகச் சேர்ந்திருந்தாலும், இரைப்பை குடல் இவைகளைப்பற்றிய கோளாறுகளால் வருந்தும் குழந்தைகளுக்கு இது நல்ல உணவாகும். பதினைந்து வருஷத்திய அநுபவத்தின் பேரில் இவ்விதம் நான் சொல்லுகிறேன். இதர உணவுகளைக் கொடுத்து உபயோகமில்லாமல் போயிருக்கும்போது, இந்தப் பாலையே கொடுப்பித்து நான் அனேக குழந்தைகளைக் காப்பாற்றியிருக்கிறேன். ஆனால் ஆரோக்யமாயிருக்கும் குழந்தைகளுக்கு பசும்பாலுக்கு பதிலாக இதைக் கொடுத்தால், அஸ்திநமன ரோகம் (Rickets) உண்டாகும். அவ்விதம் கொடுத்தால் குழந்தை பார்வைக்கு புஷ்டியாயிருப்பதுபோல் காணப்படுவதுண்மையானாலும், சிறிது காலத்திற்கப்பால் ஒரு வித அஜீர்ணரோகத்தை உண்டாக்கி விடுகின்றது.

கழுதைப் பால்:—இது பல விதத்திலும் முலைப் பாலுக்கு ஏற்றதாயிருக்கின்றது. இதை விளாவாமலே கொடுக்கலாம். எல்லாக் குழந்தைகளும் இப்பாலை நன்றாக ஏற்றுக் கொள்ளும். ஏழை ஜனங்களுக்கு முலைப்பாலுக்குப்

பதிலாக உபயோகித்துக் கொள்ள இதுவே தகுந்ததென்று என் கொள்கை.

ஸாதாரணமாய் ஸ்டார்ச்சு என்னும் மாவை யுடைய அரிசி, ஆரோரூட் என்னும் குவாக்கி மூங்கு இவை ஸம்பந்தமான ஆஹாரங்களும், செயற்கை யுணவுகளும் குழந்தைகளுக்கு நான்கு பற்கள் முளைப்பதற்கு முன் கொடுக்கத்தகுந்தவைகளாகா. இவ்வித உணவுகளை ஜீர்ணமாக்கத் தகுந்த திரவத்தை யுண்டாக்குவதான க்லோமா (Pancreas) என்கிற அவயவமானது * ஒன்பதாவது மாதத்திற்கு முன் தகுந்த சக்தி பெறுவதில்லை யானதால், அந்த ஆஹாரங்கள் அவ்வயதுக்குத் தகுந்தவையாக மாட்டா.

உஷ்ணபேதி:—முலைப்பாலில் 100-க்கு 7 பங்கும், பசும்பாலில் 100 - க்கு 4 பங்கும் சர்க்கரையுண்டு. ஆகையால், விளாவிய பாலை அதிக சுவையுள்ளதாகச் செய்வதற்கு அறியாத்தனத்தினால் கருப்பஞ்சீனியை (Cane Sugar) மிகுதியாக அதில் சேர்ப்பது வழக்கம். கருப்பஞ்சர்க்கரை குடலில் புளித்துப் போவதால், குழந்தைக்கு அடிக்கடி பசுமையாக பேதியாவதுடன், சரீரத்தில் உஷ்ணம் அதிகமாய் தேஹத்தின் எடையும் குறைந்து விடும். இதற்குத் தகுந்த சிகித்ஸை அந்த சர்க்கரையை உபயோகிக்காமலிருப்பதேயாம். ஆனால் சரியான நிலைமையிலுள்ள குழந்தைகளுக்கு நல்ல சர்க்கரையை தகுந்த அளவில் கொடுப்பது பிசகென்று நினைக்கவேண்டாம். குழந்தைகளின் சரீரகனத்தை விருத்தி செய்வது சர்க்கரையே. புதிதாகக் கறந்த பாலையே எப்பொழுதும் உபயோகிக்க வேண்டும். பாலில் எவ்விதத்திலாவது சேர்ந்திருக்கும் ரோகங்களுக்குக் காரணமான ஸூக்ஷ்ம ஜந்துக்கள் அழிவதன் பொருட்டு, அதைக் கொதிக்க வைத்து உபயோகிக்க வேண்டும். அளவு மீறி மென்மேலும் பாலைக் காய்ச்சினால், பால் மிகவும் குழம்பாய், அதில் ஜலபாகம் குறைந்து, கேஸீன் என்கிற ப்ரோடீட் சில உப்புகளும் அதிகமாய் விடுவதால் குழந்தைகளுக்கு நன்றாய் ஜீர்ணமாகாது. நன்றாக வயது முதிர்ந்த குழந்தைகளே அதை ஜீர்ணம் பண்ணிக்கொள்ளக்கூடும்.

புட்டியைக் கொண்டு பாலூட்டல் (Bottle-Feeding):—முலைப் பாலூட்டுவதால் குழந்தைகளுக்கு இரைப்பை, குடல் இவைகளைப் பற்றிய நோய்கள் வராது. வேறு கதியில்லாமற் போனால் தான், புட்டிகளைக் கொண்டு பாலூட்ட வேண்டும். வயிற்றுப் பொருமல், குடல் வீக்கம் இவை உண்டாகாமலிருக்கும் விதமாய் பால் போட்டும் புட்டியை கூடுமான வரையில் மிகவும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டியது. அதற்குச் சேர்ந்த ரப்பர்க் காம்பு முதலிய வற்றையும் அவ்விதமே வெகு சுத்தமாக வைத்திருக்க வேண்டும். புட்டியைக் கொண்டு பாலூட்டப்படும் குழந்தைகளுக்கு தொற்றுவியாதி முதலியதைத் தடுத்துக் கொள்வதற்கு வேண்டிய இயற்கையான சக்தி மிகவும் குறை வென்பதையும், ச்வாஸாசய ரோகங்கள் அக்குழந்தைகளுக்கு ஸாதாரணமாய் உண்டாகக் கூடுமென்பதையும் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்வது நலம்.*

* வயிற்றில் இரைப்பையின் கீழ், யக்ருத் அல்லது கல்லீரல் (Liver) என்கிற வலது பக்கத்திலுள்ள கிரந்திக்கும், ப்லீஹம் அல்லது மண்ணீரல் (Spleen) என்கிற இடது பக்கத்திலுள்ள கிரந்திக்கும் (Gland) இடையில் குறுக்காய் நீளமாயிருக்கும் ஒரு வித கிரந்தியானது க்லோமா (Pancreas) என்று சொல்லப்படும்.

* ப்ராக்டிகல் மெடிஸின் என்கிற வைத்திய பத்திரிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

வைத்திய கலாநிதி.

ப்ரமாதீசஹு புரட்டாசிமீ

HON'BLE Dr. NAIR'S MEDICAL REGISTRATION BILL.

ஹானரபுல் டாக்டர் நாயருடைய வைத்திய ரெஜிஸ்டர் மஸோதா.

வைத்தியரிடம் சிகித்சை செய்துகொள்ள விரும்புபவர், யோக்யதை பெற்றுள்ள வைத்தியர்களையும், யோக்யதை பெறாத வைத்தியர்களையும் பகுத்தறிவதற்காக, வைத்தியர்களை ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்று, ஹானரபுல் டாக்டர் நாயர் அவர்களால் சென்னைச் சட்ட நிர்மாண ஸபையில் ஒரு மஸோதா பிரேரிக்கப்பட்டிருப்பதை பலர் அறிந்திருக்கக் கூடும். ஆகிலும் வெளியூர்களிலுள்ள சில வைத்தியர்களும் இதர ஜனங்களும் இம்மஸோதாவைப் பார்த்திருக்கமாட்டாரென்று நினைத்து அதைப் பற்றி இங்கு நாம் சுருக்கமாக விசாரிக்க விரும்புகிறோம்* :—

இந்த மஸோதாவிலுள்ள முதல் அத்தியாயத்தில் நாம் விசாரிக்க வேண்டிய விஷயம் விசேஷமாயில்லை. இரண்டாவது அத்தியாயத்தில் பாரா (1) இல் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட வைத்தியாபியாஸியைத் தவிர்த்து மற்றெவரும் சட்டப்படி ஸர்டிபிகேட்டுகளில் கையெழுத்திடத் தகுந்தவராகமாட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுதைப் ஒரு அஸிஸ்டெண்டு ஸர்ஜனோ அதற்கு மேற்பட்ட வைத்திய உத்தியோகஸ்தரோ கையெழுத்து செய்தால்தான் ஒரு ஸர்டிபிகேட் செல்லுமென்று பெக்தனையிருந்து வருகிறது. ஆனால் அனேக ஸமயங்களில் இப்பொழுது தகுந்த செல்வாக்குள்ள வேறெ இங்கிலீஷ் அல்லது நாட்டு வைத்தியர்கள் தம்மிடம் வைத்தியம் செய்துகொள்பவருக்கு ஸர்டிபிகேட் கொடுத்து அது இராஜாங்கத்தில் அனேக உத்தியோகஸ்தரால் ஒப்புக்கொள்ளவும் பட்டு வருகிறதுண்டு. இப்பொழுது இந்த மஸோதாவின்படி இந்த சட்டம் ஊர்ஜிதமானால், பல ரோகிகள் ஸர்டிபிகேட் விஷயத்தில் கஷ்டப்படவேண்டி நேரிடும். பெரிய பட்டணங்களில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட இங்கிலீஷ் வைத்தியர்கள் கிடைத்த போதிலும், வெளியூர்களிலிருக்கும் ஜனங்களுக்கு எப்பொழுதும் அப்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட வைத்தியர்கள் கிடைப்பர் என்று சொல்ல முடியாது. ரோகிகள் பிராணபாயமான நிலைமைகளிலிருக்கும்போது, திடீரென்று ஒரு ஸர்டிபிகேட் அவசியமாயிருக்குமானால், அப்பொழுது அவ்வித டாக்டர்களைத் தேடிக்கொள்வதற்கும், அப்படி அகப்பட்டாலும் அவ்வித டாக்டர்களிடத்திலிருந்து எளிதில் ஸர்டிபிகேட் வாங்குவதற்கும் அனேக கஷ்ட நஷ்டங்கள் நேரிடும். மேலும், எந்த வைத்தியன் ஒரு ரோகிக்கு சிகித்சை பண்ணிகிறானோ, அவன் அந்த ரோகிக்கு ஸமயங்களில் அவசியமான ஸர்டிபிகேட்டில் கையெழுத்து செய்து கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறான். ஏனெனில், அந்த ரோகியின் சரீரநிலைமைகள், வியாதியின் கூறுபாடுகள், அவனுக்கு ஒத்துக்கொள்ளக் கூடிய சிகித்ஸாக்கிரமங்கள் முதலியவற்றில் வழக்கமாய் வைத்தியம் செய்துவரும் [illegible]த்தியனுக்கே அநுபவமிருக்குமேயன்றி, [illegible]திதாகப் பார்க்கும் வைத்தியனுக்கு அ[illegible] அநுபவம் இருக்கமாட்டாது. ஒரு நாட்[illegible] வைத்தியர் அல்லது ஆயுர்வேத வைத்திய[illegible] வெகு நாளாக சிகித்சை செய்துகொண்[illegible]ருக்கும் ரோகி, ஸர்டிபிகேட் வேண்

* இந்த மஸோதாவின் முழு விஷயமும் விவரமாக போர்ட் ஸெய்ண்ட் ஜார்ஜ் கஜட்டில் (Fort St. George Gazette) இங்கிலீஷில் 1913ஷு ஜூன்மீ 17உ இலும், தமிழில் ஜூலைமீ 1உ இலும் வந்திருக்கிறது. வேண்டியவர் அவற்றைப் பார்த்துக் கொள்க.

டிய ஸமயத்தில் மட்டும் இங்கிலீஷ் வைத்திய உத்தியோகஸ்தரிடம் சென்று ஸர்டிபிகேட் பெற்றால், ரோகியின் சரீரநிலைமைகளில் விசேஷ அநுபவம் பெறாதவரால் கொடுக்கப்பட்ட அவ்வித ஸர்டிபிகேட்டுக்கு எவ்வளவு யோக்யதையிருக்கும்? ஆகையால், ஸர்டிபிகேட்டில் கையெழுத்திடுவதற்கு ஆயுர்வேத யூனானி வைத்தியர்களிலுங்கூட செல்வாக்குள்ளவர்கள் அல்லது யோக்யதையுள்ளவர் தகுந்தவராவர் என்கிற விஷயமும் இந்த பாராவில் சேர்க்கப்படுவது மிகவும் அவசியம்.

இரண்டாவது அத்தியாயம் முடிய, மதராஸ் மெடிகல் கௌன்ஸில் என்கிற வைத்திய ஆலோசனை ஸபை ஒன்று ஏற்படுத்துவதற்கு வேண்டிய நிபந்தனைகளும், வைத்தியர்களுக்கு ரெஜிஸ்டர் வைப்பதைப்பற்றிய விஷயங்களும், எவ்விதமான வைத்தியர்கள் ரெஜிஸ்டர் செய்து கொள்வதற்கு யோக்யதையுள்ளவர்களென்றும் விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த அத்தியாயத்தில் 13-வது பாரா (b) இல் கண்டபடி இங்கிலீஷ் வைத்தியர்களைத் தவிர, இதர வைத்தியர்கள் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்கு அர்ஹரல்லர் என்று தெரியவருகிறது. ஏனெனில், இந்த மஸோதாவின் ஷெட்யூலில் கண்ட யோக்யதையுள்ளவர்கள்தான் 13 (b) பிரகாரம் ரெஜிஸ்டர் செய்யப்படுவார்களாம். ஷெட்யூலின் விவரம்:—

(1) சென்னப்பட்டணம் - பம்பாய் - கல்சத்தா - அல்லஹாபாத் - லாஹூர் இந்த ஸர்வகலா ஸங்கங்களில் வைத்தியசாஸ்திரத்தில் டாக்டர், பாச்சலர், லைஸென்ஷியேட் என்கிற பட்டங்களும், சஸ்திரசிகித்சையில் மாஸடர், பாச்சலர், லைஸென்ஷியேட் என்கிற பட்டங்களும் பெற்றவர்கள்;

(2) யாதொரு கவர்ன்மெண்ட் வைத்திய கலாசாலையிலாவது பள்ளிக்கூடத்திலாவது பயிற்சியடைந்தவராய், வைத்தியம் செய்யவாகிலும் சஸ்திர சிகித்சை செய்யவாகிலும் மருத்துவம் செய்யவாகிலும் யோக்யதையுள்ளவரென்று நிர்ணயித்தோ, அல்லது இராணுவ அஸிஸ்டெண்ட் ஸர்ஜன், ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்ட்ஸ், அல்லது ஸப் அஸிஸ்டெண்ட்ஸர்ஜன் இவ்வித அலுவல்களைச் செய்ய யோக்யதையுள்ளவரென்று நிர்ணயித்தோ, இந்திய கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட டிப்ளோமா என்னும்யோக்யதாபத்திரம்அல்லதுஸர்டிபிகேட் பெற்றிருக்கும்யாதொருநபர்.

இப்படி மேற்கண்ட ஷெட்யூலில் M.D. முதற் கொண்டு ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்ட் வரையிலும் அவ்வித யோக்யதை பெற்றுள்ள இங்கிலீஷ் வைத்தியர்களே குறிக்கப்பட்டிருக்கிறார்களேயன்றி, ஆயுர்வேத வைத்தியர் முதலிய வேறெவரும் எடுக்கப்படவில்லை, ஆனால், இந்த மஸோதாவின் கடைசியில், 'இந்த மஸோதா ஆயுர்வேத யூனானி வைத்தியமுறைகளுக்கு முற்றிலும் ஸம்பந்தப்படாதபடி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது' என்று சொல்லியிருப்பதானது, ஒருவாறு மேலுக்கு ஆயுர்வேத யூனானி வைத்தியர்கள் இதனால் பாதிக்கப்படமாட்டார்களென்பதாகத் தோற்றினாலும், நன்கு விசாரிக்கப்போனால், பிற்காலத்தில் இந்த மஸோதா ஆயுர்வேத யூனானி முதலிய வைத்தியர்களுக்கு அனேக வகையில் பாதகங்களையுண்டாக்குமென்பது நிச்சயம். இதற்கு, ஆயுர்வேத யூனானி வைத்தியர்களில் ஸாமர்த்தியமும் செல்வாக்கும் யோக்யதையுள்ளவருமான வைத்தியர்களையும் ஷெட்யூலில் சேர்க்காமலிருப்பதே இப்பொழுது ஒரு திருஷ்டாந்தமாகும். ஆயுர்வேத யூனானி வைத்தியர்களுக்கு யோக்யதை யென்னவென்று கேட்கலாம். இப்பொழுது சென்னையில் ஒரு ஆயுர்வேத காலேஜும், மைலாப்பூரில் ஒரு ஆயுர்வேத பாடசாலையும், ஸ்ரீகன்னிகாபரமேச்வரீ ஆயுர்வேத தர்ம வைத்தியசாலையும், வெங்கடரமண வைத்திய சாலை யென்கிற வேறொரு ஆயுர்வேத வைத்தியசாலையும், ஆயுர்வேதகாலேஜைச் சேர்ந்ததாய் மற்றொரு தர்மவைத்தியசாலையும் உண்டு. மேலும், டில்லியில், ஒரு பெரிய ஆயுர்வேத

31

யூனானி மெடிகல்காலேஜ் ஏற்படுத்துவதை உத்தேசித்து ஆயிரக்கணக்காக பணம் சேர்ந்திருப்பதுடன், அநேக இராஜாக்களும் வருஷந்தோறும் ஆயிரக்கணக்காக உதவி செய்வதாகவும் வாக்களித்திருப்பதாகத் தெரியவருகிறது. மைசூர்க்கவர்ன்மெண்டார் தாமே ஒரு ஆயுர்வேத காலேஜை வைத்து நன்றாக நடத்தி வருகிறார்கள். மேற்கண்ட ஆயுர்வேத காலேஜுகளிலும் பாடசாலைகளிலும் படித்து, மேற்படி வைத்தியசாலைகளில் அநுபவம் பெற்று, டிப்ளோமா என்னும் யோக்யதாபத்திரங்களை அந்தந்த பரீக்ஷகஸங்கங்களிலிருந்து பெற்ற ஆயுர்வேத வைத்தியர்களையும் ஏன் ஷெட்யூலில் சேர்க்கக் கூடாது? இப்பொழுது சென்னை ஆயுர்வேத காலேஜில் படித்துத் தேறிய ஆயுர்வேதவைத்தியர்களில் சுமார் இருபது பேருக்குமேல் சென்னையிலும் வெளியூர்களிலும் உத்தியோகம் பெற்றும் ஸ்வதந்திரமாகவும் சாஸ்திரீதியாகவும்வைத்தியம்செய்து வருகிறார்கள். அல்லாமலும், இந்த காலேஜில் படிப்பவர்களுக்கு சரீரதத்துவம் முதலிய சாஸ்திரங்களையும் இங்கிலீஷ் முறைப்படி ஆங்கில வைத்தியர்களைக் கொண்டே படிப்பிக்கிறபடியால், மற்ற ஸாதாரண வைத்தியர்களைப் போலன்றி,மேல் நாட்டு வைத்தியரைப் போல் தத்துவமறிந்து வைத்தியம் செய்யக்கூடிய திறமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். மைலாப்பூரில் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆயுர்வேத பாடசாலையில் படித்துத் தேறி வைத்தியம் செய்து வருபவரும் பலர் இருக்கின்றனர். இவ்வித வைத்தியஸ்த்தாபனங்களில் சாஸ்திரப்படி வைத்தியம் கற்றுத் தேறிய ஆயுர்வேத வைத்தியர்களுக்கு ஷெட்யூலில் இடங்கொடுக்காது விட்டுவிட்டது வருந்தக்கூடிய விஷயம். இவர்களை ஷெட்யூலில் சேர்க்காமல் ஒதுக்கிவிட்டால், படித்து ஒருவித யோக்யதை பெற்ற ஆயுர்வேதவைத்தியருக்கும் யோக்யதை பெறாத வைத்தியருக்கும் பேதமில்லாமற் போய்விடுகிறதல்லவா? மேலும் இதனால் ஆயுர்வேத காலேஜ் முதலியதில் சேர்ந்து இதரர் படிக்கவும் விரும்பமாட்டார். ஏனெனில், படித்த சுதேச வைத்தியர்களுக்கு விசேஷமான ஒருவித செல்வாக்கு இராஜாங்கத்தாராலுண்டானால்தான், அவ்வித செல்வாக்கில் விருப்பங்கொண்டு இதரரும் படித்து வைத்தியம் செய்ய முயற்சிகொள்வர். படித்தவைத்தியர்களுக்கு ஒரு வித கௌரவமும் ஸ்வாதந்த்ரியமும் இல்லாமற்போனால், அதைப் பார்த்து படிப்பதற்கு ஒருவரும் பிரயத்தினப்படாமல், இஷ்டம் வந்தவரெல்லாம், சிறிது விஷயம் தெரிந்தும் தெரியாததுமாகவே வைத்தியம் செய்ய முயன்று, இன்னும் அளவற்ற படிப்பில்லாத வைத்தியர்கள் ஏற்பட்டு விடுவார்கள். இந்தியாவில் பலவிதமான வைத்தியமுறைகள் ஏற்பட்டு, அநாதிகாலமாக அவை வழங்கப்பட்டு வேரூன்றி யிருப்பதால், இவ்வைத்திய முறைகளைத் தடுப்பதும், கவனிக்காமல் விட்டுவிடுவதும் ஸாத்தியமில்லை. ஆகையால், மேற்கூறியவிதமான வைத்தியஸ்த்தாபனங்களில் சாஸ்திரப்படி படித்துத் தேறிய வைத்தியர்களையும் ஷெட்யூலில் சேர்த்து விட்டால், இவர்கள் இந்த மஸோதா ஆக்டின்படி அப்பொழுது ரெஜிஸ்டெர் செய்துகொள்வது முதலியவற்றிற்குத் தகுந்தவராகிறபடியால், இந்த வைத்தியர்களுக்குள்ள மதிப்பைப் பார்த்து இதரரும் இப்படியே படித்து ஒருவித யோக்யதையைப் பெற்று வைத்தியம் செய்ய எண்ணங்கொள்வதற்கு வழியுண்டாகும். அல்லாமலும், இப்பொழுது ஆயுர்வேதவைத்தியர்களில் வியாபகராயிருப்பவருக்கு 'வைத்தியரத்ன' என்றும், அவ்விதமே வியாபகரான யூனானி வைத்தியருக்கு 'ஷம்ஸ்-உல்-மூல்க்' என்றும் இராஜாங்கத்தாரே சில கௌரவப்பட்டமளித்

இருக்க, அவர்களையும் ஷெட்யூலில் குறிப்பிடாமலிருப்பது சரியல்லவென்று நினைக்கிறோம். ஆகையால், மேற்சொன்ன வைத்திய ஸ்தாபனங்களில் படித்துத் தேறிய ஆயுர்வேத வைத்தியர்களையும், கௌரவப்பட்டங்கள் பெற்ற ஆயுர்வேத யூனனி வைத்தியர்களையும் ஷெட்யூலில் அவசியம் சேர்க்க வேண்டியதுடன், இப்பொழுது நல்ல செல்வாக்கும் ஸாமர்த்தியமுமுள்ள நாட்டுவைத்தியர்களையும் தகுந்த பிரயத்தினத்தின்பேரில் தெரிந்தெடுத்து, அப்படிப்பட்டவர்களையும் ரெஜிஸ்டர் செய்யக் கூடுமென்று இந்த ஆக்டில் காணுவது நலம். இப்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட வைத்தியர்களைத் தவிர்த்து, இனி நூதனமாக வேறு எவராவது இத்தொழில் செய்ய முயன்றால், ஏதேனும் வைத்தியஸ்தாபனத்தில் அவர்கள் படித்துத் தேறவேண்டுமென்று ஒரு நிபந்தனை ஏற்படுத்தலாம். இப்படி செய்வதை எல்லா வைத்தியர்களும் பொது ஜனங்களும் நன்றாக அங்கீகரிப்பார்கள். டாக்டர் நாயர் கொண்டுவந்திருக்கிற இந்த மஸோதாவானது, பம்பாயில் ஸர்ஜிதத்திற்கு வந்திருக்கும் 1912-ம் ௵த்து 6-வது மஸோதா ஆக்டையும், 1858, 1859, 1860, 1876, 1886 இந்த வருஷங்களில் ஏற்பட்ட இங்கிலீஷ் மெடிகல் ஆக்டுகளையும் சற்றேறக்குறைய அனுஸரித்ததாயிருக்கிறது. கிரேட்ப்ரிடன் முதலிய மேல் நாடுகளில் இங்கிலீஷ் வைத்திய முறை ஒன்றே வெகு நாட்களாக அனேகராலும் வழங்கப்பட்டு வருவதால், அந்நாடுகளில் இவ்வித ஆக்டுகள் எத்தனை வேண்டுமானாலும் ஏற்படுத்திவிடலாம். இந்தியாவில் ஆயுர்வேதம் முதலிய உயர்ந்த சாஸ்திர முறைகளும், அவற்றில் அறிவுள்ள ஆயிரக்கணக்கான வைத்தியர்களும் விசேஷமாயிருப்பதாலும், ஹிந்துக்களில் படித்தவர்களிலும் ஸாதாரண ஜனங்களிலும் பெரும்பான்மையோருக்கு இந்த வைத்திய முறைகளிலும் வைத்தியர்களிடத்திலும் மிகுதியான நம்பிக்கை யிருப்பதாலும், அநேக வைத்தியர்களைத் தவிர்த்து இதர வைத்தியரிடம் சிகித்ஸை செய்து கொள்ள இஷ்டப்படாமல் மதாசாரங்களில் வெகு கருத்துடைய ஜனங்கள் இந்துக்களில் அளவற்றபேர் இருப்பதாலும், இப்பொழுது வைத்தியர் வேண்டிய அளவு தேசத்தில் இல்லாமலிருப்பது மெடிகல்-ஸானிடரி ரிபோர்டுகளால் நன்கு அறியப்படுவதாலும், இந்த வைத்திய மஸோதாவானது மேற்கூறியபடி திருத்தப்பட்டு, பிறகு ஸர்ஜிதத்துக்கு வருமானால், ஜனங்களால் ஏகோபித்து ஏற்கப்படுமென்றும், அப்படியானால்தான் இந்த மஸோதாவினால் தேசத்திற்கு நற்பயன் விளையுமென்றும் நம்புகிறோம். கவர்ன்மெண்டாரே இம்மஸோதா விஷயத்தில் அவரவருடைய அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறபடியாலும், வைத்திய மஸோதாவினால் நேரிடக் கூடிய இலாப நஷ்டங்களை ஆலோசித்து அபிப்பிராயத்தை வெளியிட நாம் கடமைப் பட்டிருப்பதாலும், இவ்விஷயத்தைப்பற்றி எமது எண்ணத்தை இவ்விதம் அறிவிக்கலானோம்.

THE INTERNATIONAL CONGRESS OF MEDICINE.

தேசீய வைத்திய மஹாஸபை.

(ஸபையில் நடந்த விஷயங்களின் ஸாராம்சம்)

சென்ற ஆகஸ்டு மீ 6௳ இலண்டன் நகரத்தில் ஆல்பர்டு ஹாலில் பல தேசங்களிலிருந்தும் பிரதிநிதிகளாக வந்து கூடிய வைத்திய வித்வான்களால் ஒரு மஹாஸபை நடந்தேறியது. இந்த மஹாஸபை இப்பொழுது கூடியது 17-வது முறையாகும். கானட்டுக் கோமகன் (Prince Arthur of Connaught)

ஸபையில் வந்திருந்தவர்களுக்கு நல்வரவு கூறி அவர்களை வரவேற்றார். அந்த மஹாமண்டபம் உலகத்தில் முக்கியமாயுள்ள சிறந்த வைத்திய வித்வான்களாலும், சஸ்திர சிகித்ஸையில் நிபுணராயிருக்கும் மஹான்களாலும், இதர இராஜாங்கத்தாரால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளாலும், இராணுவ வைத்திய உத்தியோகஸ்தர்களாலும் நிரம்பியிருந்தது. கானாட்டுக் கோமகன், ஸர் எட்வர்ட் க்ரே, மஹாஸபையின் அத்தியக்ஷரான ஸர் தாமஸ் பார்லோ இவர்களை அங்கு வந்திருந்தவர்களும் வெகு ஆடம்பரத்துடன் வரவேற்றார்கள்.

சக்கிரவர்த்தியவர்கள் அனுப்பிய செய்தி.

கானாட்டுக் கோமகன் மொழிந்ததாவது:— சக்கிரவர்த்தியவர்களின் ஆஞ்ஞையினால் அவர்களுக்காக, பூமியின் பல பாகங்களிலிருந்தும் வந்திருக்கிற உங்களெல்லோருக்கும் நல்வரவு கூற நான் மிகவும் ஸந்தோஷப்படுகிறேன். வைத்தியசாஸ்திரம் மேன்மேலும் விருத்தியடைவதற்கும், அதனால் உலகம் க்ஷேமமடைவதற்கும் இந்த மஹாஸபை பேருதவி புரியுமென்று அவரது கொள்கை. 1881-ம் வருஷத்தில் இந்த நகரத்தில் இவ்வைத்திய ஸபை கூடியபோது, அப்பொழுது இளவரசாக இருந்த ஏழாவது எட்வர்ட் சக்கிரவர்த்தியார் இந்த ஸபையைத் திறந்து வைத்தார். அப்பொழுது, ஸர் ஜேம்ஸ் பேஜெட் என்பவர் ஸபாத்தியக்ஷராக வீற்றிருந்தார். அந்த ஸபைக்கு பாஸ்டர் என்பவர் கூட விஜயம் செய்திருந்தார். அவர் கண்டு பிடித்த விசேஷ விஷயங்களால் வைத்திய சாஸ்திரத்திற்கு ஒரு அதிக மேன்மையுண்டானதைக் கருதி, உலகத்தார் அவருக்கு நன்றி செலுத்த மிகவும் கடமைப்பட்டிருக்கின்றனர். ரோகங்களைப் பரிசோதித்தறியவும் சிகித்ஸை செய்யவும் நன்கு உதவக் கூடியவையான ராண்ட்ஜன் ரேஸ் (Rantgen rays), ரேடியம் (Radium) முதலான சிறந்த கருவி முதலியவைகள் இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. பல த்வீபங்களிலிருந்தும் இப்பொழுது இங்கு வந்து கூடியிருக்கிற கனவான்கள், 1881-ம் வருஷத்திய மஹாஸபைக்கு வந்திருந்தவர்களைப் போல் எவ்விதத்திலும் மேன்மைபெற்றவர்களே. இந்த ஸபை இப்பொழுது இலண்டனில் கூடியபோதிலும், சக்கிரவர்த்தியின் செங்கோலுக்குட்பட்ட கானடா, ஆஸ்ட்ரேலியா, நியூஜிலாண்டு, தென்னாப்பிரிக்கா, இந்தியா முதலான தேசங்களிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகளும் ஆங்கிலேயரும் ஒற்றுமை பாராட்டுவதற்கு இதன் மூலமாய் ஓர் ஆநுகூல்யம் ஏற்படுகிறதென்பதைப்பற்றி ஸந்தோஷப்படுகிறேன்.

ஸபையின் காட்சி.

பற்பல தேசங்களிலிருந்து வரும் ஜனங்களைக் கூட்டியும், அநேக வகையான பொருள்களை ஓரிடத்தில் சேர்த்தும் கண்காட்சிகளை அப்போதைக்கப்போது ஏற்படுத்துவதால், அநேக தேசத்தார் ஒற்றுமை பெறுவதற்கு வழியுண்டாகுமென்று நான் அறிவேன். அந்தந்த தேசங்களில் அவரவர் கண்டு பிடித்த புதிய விஷயங்களை ஒருவருக்கொருவர் அறிந்து கொள்வதற்கு வகை யேற்படுவதால், பல தேசத்து கல்விமான்கள் இவ்விதம் கூடுவதின் மூலமாய் மிகவும் உபயோகமுண்டாகும். இந்த ஸபையில் 8000 பேர் கூடியிருக்கின்றார்கள். இந்த மஹாஸபையில் நடந்தேறும் விஷயங்களில் பெரும்பான்மையானவை சாஸ்த்ரீயமாகவேதான் இருக்கும்; ஆகிலும், அவற்றில் அநேக விஷயங்கள் பொதுவாக ஜனங்களனைவராலும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியவைகளாகவும் இருக்கும். இவ்விஷயங்களை யெடுத்துப் பேச அநேக வித்வான்கள் அநேக தேசங்களிலிருந்து வந்திருக்கின்றனர். அக்கிராஸனாதிபதியான ஸர் தா

மஸ் பார்லோ அவர்கள் மற்ற விஷயங்களையெல்லாம் எடுத்துப் பேசுவர். இராஜ சக்கிரவர்த்தியவர்கள் உங்களெல்லோருக்கும் வேண்டிய ஸௌகரியங்களை யேற்படுத்தியிருப்பதால், இந்நகரத்தில் ஸுகமாயிருந்து காரியங்களை நிறைவேற்றிவிட்டு நீங்கள் திரும்புவீர்களென்று நம்புகிறேன். சக்கிரவர்த்தியவர்களின் பெயரால் இந்த மஹாஸபையை இப்பொழுது நான் திறந்து வைக்கிறேன்.

ஸர் எட்வர்ட் க்ரே அவர்களின் பேச்சு.

ஏற்கனவே கானாட்டுக் கோமான் நல்வரவு கூறியதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களென்று நிச்சயிக்கிறேன். ஸபையில் நடக்கேற வேண்டிய காரியங்களில் நாங்கள் இடையில் வந்து ஸமாதானம் செய்ய வேண்டிய பிரமேயம் ஒன்றும் நேரிடாதென்றும் நம்புகிறேன். சாஸ்திரப் பயிற்சி யென்பது ஒரு தேசத்தைப் பொருந்தியதென்பதற்கில்லை; அது எல்லாத் தேசங்களுக்கும் பொதுவானது. சாஸ்திரஞ்ஞருக்கு மற்ற விஷயங்களில் ஏதாவது விரோதமிருந்தாலும், அறிவு, கொள்கை, ஆராய்ச்சிவிஷயமான திறமை இவற்றில் எத்தேசத்தாராயினும் அவர்கள் ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டுவதில்லை. என்றாலும் சாஸ்த்ரீயவிஷயமான கொள்கைகளில் அபிப்பிராயபேதம் ஒருவருக்கொருவர் ஏற்படலாம்; ஆனால், அவ்வபிப்பிராயபேதங்களும் தேசபேதங்களைப் பொருந்தியவை யாகா.

இவ்விஷயத்தில் பொது ஜனங்களின் சிரத்தை.

இதர சாஸ்திரங்களைக் காட்டிலும் வைத்தியசாஸ்திரத்தில் ஒவ்வொரு மனிதனும் அக்கறையுடையவனாயிருக்க வேண்டியது அவசியம். வியாதிகளாலேற்படும் துன்பங்களை நீக்குவதற்கு வைத்தியசாஸ்திரம் இன்றியமையாததாயிருப்பதாலும், ஒவ்வொருவனும் வாழ்நாள் முடிய நோய் நொடியின்றி காலங்கழிக்கும் வழிகளை இச்சாஸ்திரம் போதிப்பதாலும், இது வரையில் இரஹஸ்யமாயும் ஒருவனாலும் பரிசீலனம் பண்ணப்படாததாயும் அறியக் கூடாததாகவுமுள்ள விஷயங்களை இவ்வித ஸபையில் நடக்கும் விசேஷமான ஆலோசனைகளின் மூலமாய்த் தெரிந்து கொள்ளக் கூடுமாகையாலும், ஜனங்களுக்கு இவ்வித ஸபையினால் பேருதவி கிடைக்கும். சாஸ்திரீயமான விஷயங்களுக்கு முற்காலத்தில் அவிவேகத்தினால் இடையூறுகள் நேரிட்டதுபோல், இப்பொழுது சாஸ்திரமுறைக்கு அவ்வித இடையூறு அல்லது கஷ்டம் ஒன்றும் நேரிடமாட்டாது. இந்த சாஸ்திரத்தில புதிது புதிதாக எவ்வெவ் விஷயங்களை வைத்தியவித்வான்கள் கண்டு பிடிக்கப்போகிறார்களென்று ஜனங்கள் ஆவலுடன் எதிர் பார்த்தவாறு இருக்கிறார்களேயொழிய, இச்சாஸ்திரத்திற்கு இடையில் பிரதிபந்தகமாக ஒருவருமில்லை. தற்காலத்தில் புதிது புதிதான அரிய விஷயங்களை யேற்றுக்கொள்ள அனைவரும் அபிப்பிராயப்படுகிறார்களேயன்றி, இது வரையில் நடந்து வந்த பிழையான வழிகளையே பின்பற்ற வேண்டுமென்று விரும்புபவரையும் காணேன். தன்னை ஸர்வஞ்ஞன் என்று நினைத்துக் கொண்டிருப்பவன் எவனும் உலகத்தில் விசேஷ விஷயமெதையும் அறிந்து கொள்ள முடியாது. மேலும், வைத்தியசாஸ்திரத்தில் ஒவ்வொருவனும் புதிது புதிதான விஷயங்களைத் தெரிந்து கொள்ள விருப்பமுடையவனாகவே இருப்பான். நீங்கள் வந்து இங்கு கூடியிருப்பது பலவித நன்மைகளுக்குக் காரணமாயிருப்பதுடன், இராஜ சக்கிரவர்த்தியவர்களின் செங்கோலுக்கும், இலண்டன் நகரத்திற்கும் மிக மேன்மையாயிருக்குமென்று நிச்சயித்து உங்களுக்கு நல்வரவு கூறுகின்றேன்.

ஸபாத்தியக்ஷரின் பேச்சு.

சென்ற முப்பது வருஷமாய் வைத்திய சாஸ்திரம் விருத்தியடைந்து வந்த வகை.

இந்த ஸபைக்கு 1881-ம் வருஷத்தில் விஜயம் செய்திருந்த கனவான்களில் பெரும்பான்மையோர் காலஞ்சென்று விட்டனர். அப்பொழுது ஸபாத்தியக்ஷரா யிருந்த ஜேம்ஸ் பேஜெட் என்பவர் படுக்கையிற் கிடக்கும் ரோகிகளுக்குள்ள வியாதிகளை நன்றாகக் கண்டறிவதில் மிக வியாபகராயிருந்தார். சஸ்திர சிகித்ஸைக்குரிய ரோகங்கள், அவ்வித விரணங்கள் முதலியவைகளால் சரீரதாதுக்களுக்குண்டாகும் மாறுபாடுகளைப்பற்றிய தத்துவங்கள் (Morbid Anatomy), பிணிகளின் பூர்வரூபங்கள்,* அவற்றில் பல ரோகங்களுடைய பூர்வரூபங்களுக்குள்ள ஒற்றுமை அல்லது வேற்றுமைகள் இவைகளைப்பற்றிய விஷயங்களால் அவருடைய மனது முழுதும் நிறைந்திருந்தது. ஜன்னர், கல், கார்டனர், வில்க்ஸ் இவர்கள், படுக்கையில் வீழ்ந்திருப்பவர்களின் ரோகநிதான முறைகளை (Pathology) போதிப்பதில் மிக ஸமர்த்தர்களாயிருந்தனர். பொதுவான எல்லா வியாதிகளின் தன்மைகளையும் அறிந்திருந்த இவர்களைப் போன்ற வியாபகர்கள் இப்பொழுது துர்லபம். பொதுப்பட ரோகங்களையெல்லாம் சிகித்ஸை செய்வதில் வியாபகரான வைத்தியர்களுள் கடைசி காலத்தில் இருந்தவர்கள் இவர்களே. இக்காலத்திலோ தனித்தனி வியாதிகளுக்கும் தனித்தனி விஷயங்களுக்கும் தனித்தனி அதிகாரிகள் ஏற்பட்டு வருகிறார்கள். நரம்புகளைப்பற்றிய ந்யூரால்ஜியா (Neuralgia) என்கிற வாதரோகதத்துவத்தில், ஜாக்ஸன் என்கிற வைத்தியசிரேஷ்டர் முக்கிய அதிகாரியா யிருந்தார். இவர் கூறியிருக்கிறபடி, இந்த வாதரோகம் உண்டாகும்போது ஸம்பவிக்கிற குறிகளையும், இவ்விவ்வித காரணங்களால் அக்குறிகள் ஏற்படுகின்றனவென்பதையும், மற்றும் இந்த ரோகத்தைப் பற்றிய தத்துவங்களையும் டேவிட் பெரியர் என்பவர், 1881-ம் வருஷத்தில் நடந்த ஸபையில் எடுத்து விசதமாக நிரூபித்தார். உதரஸம்பந்தமான சஸ்திரசிகித்ஸைகளில், அக்காலத்தில் ஸ்பென்ஸர் வெல்ஸ், தாமஸ் கெய்த், டேவிட் இவர்கள் வெகு நிபுணரா யிருந்தனர். ஹக்ஸ்லி யென்பவர் அப்பொழுது பிரக்ருதி சாஸ்திரத்தில் (Natural Science) மிக ஸமர்த்தரென்று பிரஸித்தி பெற்றவர். இவர் வைத்திய சாஸ்திரத்திற்கும், ஜீவசாஸ்திரத்திற்கும் (Biology) உண்டான ஸம்பந்தத்தைப்பற்றி அநேக சிறந்த உபந்யாஸங்கள் செய்திருக்கிறார். இப்பொழுது பிரபலமான நல்ல நிலைமையிலிருக்கும் நேத்திரரோக சாஸ்திரமானது அக்காலத்தில் விருத்தியாகத் தொடங்கியதற்கு, வில்லியம் பௌமன் என்பவர் முக்கிய காரணமாயிருந்தார். லிஸ்டர் என்பவரும் அப்பொழுது வைத்திய சாஸ்திர விஷயத்தில் பெரும் புகழ்பெற்றிருந்தவர்.

பிரத்யக்ஷ பரீக்ஷாமுறைகளின் அபிவிருத்தி.

பழையன கழிந்து நவீன முறைகள் அனுஷ்டிக்கப்படவேண்டுமென்கிற கொள்கை வெகு காலத்திற்கு முன்னிருந்தே அனுஸரிக்கப்பட்டு வருகிறதென்றாலும், 1881-ம் வருஷத்திய வைத்திய மஹாஸபையில்தான் அக்கொள்கை மிக அவசியமானதென்று நிலை நிறுத்தப்பட்டது. அதற்கு முன் மூடபக்தியினாலும், கேவலம் அநுபவத்தினாலும், மற்றும் அறிவில்லாத பல வழிகளைக்கொண்டும் செய்து வந்த வைத்தியத்தொழிலானது அக்காலத்துடன் நின்றுவிட்டது. பிறகு அந்தந்த விஷயங்களிலும் ஊக்கத்துடன் கவனம் செலுத்தி அவற்றை உற்று நோக்கி

* பூர்வரூபம்—ஒவ்வொரு ரோகம் உண்டாகும்போது அவற்றிற்கு முன்னதாய் ஏற்படும் சில குறிகள்.

வந்ததில், பிரத்யக்ஷ பரீக்ஷாமுறைகள் புதிது புதிதாக அபிவிருத்தியடையத் தொடங்கின. முப்பது வருஷங்களுக்கு முன் பாஸ்டர், லிஸ்டர், காச் என்பவர்கள் மேற்கூறிய முறைகளை வெகு சிரத்தையுடன் ஸாமர்த்தியமாய் செய்து வந்ததால், இவர்கள் மூவரும் வைத்திய சாஸ்திரமாகும் பர்வதத்திற்கு மூன்று சிகரங்களைப் போல் விளங்கினர். அக்காலத்தில் இம்மூவரைத் தவிர்த்து மற்ற வைத்தியர் அனைவரும் ஸாதாரண தாழ்ந்த நிலைமையிலிருந்திருக்க, இப்பொழுது அளவிறந்த உழைப்பாளிகள் பல வழிகளிலும் இடைவிடாமல் வேலை செய்து வருவதால், சாஸ்திர விற்பத்தியானது பெரும்பாலும் எல்லோரிடமும் மிகவும் ஒழுங்காக உயர்ந்த நிலைமையைப் பெற்று அதன் மூலமாய் அனைவருமே அம்மூவரைப்போல் மஹோன்னத தசையை யடைந்து ஏற்றத்தாழ்வின்றி மேன்மை பெற்றிருப்பதால், சாஸ்திர விற்பன்னர் எல்லோரும் உயர்ந்த பீட பூமியைப் போல் விளங்குகின்றனர். 1881-ம் வருஷத்தில் வைத்தியசாஸ்திரத்தில் 15 பிரிவுகளே இருந்தன. இப்பொழுது (1913-ம் வருஷத்தில்) இவ்வைத்தியசாஸ்திரமானது 23 பெரிய பிரிவுகளுடனும், 3-உட்பிரிவிகளுடனும் கூடியதாய் விசேஷமாக விருத்தியடைந்திருக்கிறது. ஒவ்வொரு பிரிவிலும் தனித்தனி விசேஷப் பயிற்சியுள்ளவர்கள் ஒன்றுகூடி சில தனி விஷயங்களை ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. இவ்விதம் செய்வதற்காக இப்பொழுது 14 ஸபைகளை தனித்தனியா யேற்படுத்துகின்றோம்.

நாம் நமது முன்னோர்களைவிட இப்பொழுது எவ்விதங்களில் விருத்தியாயிருக்கின்றோமென்பதை யோசிப்போம். இலண்டனில் அப்பொழுது நடந்த தேசிய வைத்திய மஹாஸபைக்குப் பிறகு, காச் என்பவர், க்ஷயரோகம் கண்டமாலை முதலியவற்றிற்குக் காரணமான விஷகுணமுள்ள ஸூக்ஷ்மாங்குரங்கள் (Bacteria) ஜீவித்து வளரும் சரித்திரங்களைப்பற்றி சில நூல்கள் எழுதி வெளியிட்டார். அதனால் அனேக விஷயங்களைத் தெரிந்துகொண்டோம். பிறகு, கிரமமாக ரோகங்களுக்கு பிரதான காரணங்களையும், அபிரதான காரணங்களையும் பகுத்தறியும் வழிகள் கண்டு கொள்ளப்பட்டன. சில ரோகங்களுக்குள்ள தீவ்ரமான நிலைமையில் (Acute form) இரத்தத்தில் சேர்ந்துள்ள விஷாங்குரங்களுடன், வேறு சில மலின வஸ்துக்களும் உண்டாய் அவற்றோடு சேர்ந்து, அவைகளே ஒன்றுக்கொன்று எதிர்த்துப் போராடி இறுதியில் அவை அழிய நேரிடுவதால், கொடிய வியாதியானது அவ்வித தீவ்ராவஸ்தையிலிருந்து தானாகவே குறையத் தலைப்பட்டு குணமாய்விடுகிறது. இவ்வாறு ரோகம் ஔஷத பிரயோகமின்றியே குணமாகும் வகையை பிராக்ருத சிகித்ஸை (Nature-cure) என்பார்கள். இவ்வித சிகித்ஸாமுறையைப் பின்பற்றியே தற்காலத்தில் ஸீரோதிராபி (Sero Theropy), வாக்ஸைன் திராபி (Vaccine Theropy) என்கிற இரண்டு விதமான புதிய சிகித்ஸா முறைகளைக் கண்டு பிடித்திருக்கின்றோம்*. க்ளெப்ஸ் லோபர் என்பவரின் மூலமாய், ரோகங்களுக்குக் காரணமான சில ஜீவாங்குரங்களின் சரித்திரமும், டிப்தீரியா (Diphtheria) என்னும் குரல்வளையில் காணும் ஒருவித துத்திவியாதியின் முக்கிய காரணமும், விஷமுறிப்பு முதலிய விசேஷ

* அந்தந்த ரோகங்களால் பீடிக்கப்படும் பிராணிகளின் உடலிலுள்ள லஸீகா வென்னும் நிணநீரை (Serum) எடுத்து மனிதரின் இரத்தத்தில் குத்திச் செலுத்துவதால் சில ரோகங்களைத் தடுக்கவும், உண்டான ரோகங்களைப் போக்கவும் வகை யேற்பட்டிருக்கிறது. இது போன்ற முறையே ஸீரோ திராபி, வாக்ஸைன் திராபி என்று கூறப்படுகிறது. ஆயுர்வேதத்தில் இவ்வித முறை ததர்த்தகாரி யெனப் படும்.

என சில ஔஷதமுறைகள் முதலியவையும் தெரியவந்தது. ஸந்நிபாதஜ்வரத்துடன் (Typhoid fever) வருந்தும் ரோகியின் சரீரத்திலுள்ள விஷக்கிருமிகளை நன்கு பரீக்ஷை செய்ததில், அவ்வித ரோகம் வராதபடி தடுக்கும் முறைகளும் கண்டு பிடிக்கப்பட்டன. தீவ்ரமான சில பிரதான தொற்று வியாதிகள் உண்டாவதற்குக் காரணமான ஸூக்ஷ்மஜீவன்கள் எவையென்று நாம் இன்னும் தெரிந்து கொள்ளக் கூட வில்லை. இப்பொழுது உண்டாகும் சில தொற்று வியாதிகளை நன்கு உற்று நோக்கி பரிசோதனை செய்ததில், குழந்தைகளுக்குக் காணும் பார்ச்வவாயுவும் ஒருவித தொற்றுவியாதி யென்றே தெரியவருகிறது. கிருமிசாஸ்திரம், ஸூக்ஷ்ம ஜீவாங்குராங்களைப் பற்றிய சாஸ்திரம், பேன் முதலியதைப் போல மனித சரீரத்திலிருந்து கொண்டே ஜீவித்து வரும் சில ஜீவன்களின் தத்துவம் இவ்வித விஷயங்களைப் பற்றிய விசேஷமான அறிவும் நமக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றது.

(தொடரும்.)

E AYURVEDIC AND UNANI EDICAL ASSOCIATION OF SOUTHERN INDIA.

ன்னிந்திய ஆயுர்வேத யூனானி வைத்திய ஸங்கம்.

சென்ற ஜூலை மீ 27உ ஆயுர்வேத காலேஜ் ஹாலில், இச்சென்னையிலுள்ள ஆயுர்வேத, யூனானி வைத்தியர்களெல்லாம் சேர்ந்து, மேற்படி வைத்தியர்களுக்காக ஒரு வைத்திய ஸங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று யோசனை செய்தார்கள். அப்பொழுது சென்னையில் பிரபல யூனானிவைத்தியரும், ஷம்ஸ்-உல்-மூல்க் என்கிற பெரிய பட்டம் பெற்றவரும், சென்னைச் சட்டநிரூபணஸபையில் மெம்பருமான ஹானரபுல் மிஸ்டர் ஜைனுலாபுடீன் ஸாஹெப் அவர்கள் அக்கிராஸனம் வஹித்தார்கள். அப்பொழுது ஆயுர்வேத சாஸ்திரங்களைப்பற்றி ஸ்ரீமான் வைத்தியரத்ன பண்டித டி. கோபாலாசாரியர் அவர்களும், யூனானி வைத்திய விஷயமாய் அக்கிராஸனாதிபதியும், மிஸ்டர் எம். அப்துல்லா ஸாஹிப் அவர்களும், வைத்திய ஸங்கத்தின் ஆவசியகத்தைப் பற்றி ஆயுர்வேத பூஷண பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களும் விஸ்தாரமாக பிரஸங்கங்கள் செய்தார்கள். ஸபைக்கு அப்பொழுது சுமார் 150 பேருக்குமேல் வந்திருந்தார்கள். பெரும்பாலும் அனைவரும் சுதேச வைத்தியர்களே. ஆங்கில வைத்தியர்களிலும் சிலர் வந்திருந்தனர். இறுதியில் ஸங்கத்திற்கு அக்கியக்ஷர், வைஸ்பிரஸிடெண்டு, காரியதரிசிகள், காரியநிர்வாஹக ஸபைக்கு 14 மெம்பர்கள் இவர்களெல்லாம், தற்காலத்தில் காரியநிர்வாஹத்தின் பொருட்டுத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இத்துடன் ஸபை கலைந்தது.

பிறகு, காரியநிர்வாஹக ஸபையார் ஆகஸ்டு மீ 18உ கூடி ஸபைக்கு வேண்டிய நிபந்தனை முதலியவைகளை பிரேரணை செய்தார்கள். மறுபடியும் சென்ற செப்டம்பர் மீ 18உ மூன்றாந்தரம் நிர்வாஹக ஸபையாரும் மற்ற வைத்தியர்களும் சேர்ந்து, இதற்கு முன் காரியநிர்வாஹக ஸபையாரால் பிரேரிக்கப்பட்ட ஸங்கத்தின் உத்தேசங்களையும் நிபந்தனைகளையும் ஆலோசனை செய்து ஏகோபித்து அடியில் வருமாறு தீர்மானித்தார்கள்:—

(1) ஸங்கத்தின் பெயர்.—இந்த ஸங்கம் "தென்னிந்திய ஆயுர்வேத யூனானி வைத்திய ஸங்கம்" (The Ayurvedic and Unani Medical Association of Southern India) என்று சொல்லப்படும்.

(2) உத்தேசங்கள்.—ஆயுர்வேத யூனானி வைத்திய சாஸ்திர முறைகளை கூடுமான வழிகளிலெல்லாம் விருத்தி செய்வதும் ஆதரிப்பதும் இந்த ஸங்கத்தின் உத்தேசமாகும்.

(3) மெம்பர்கள்.—ஆயுர்வேத யூனனி வைத்தியர் அனைவரும் இந்த ஸங்கத்தில் மெம்பர்களாகச் சேரலாம்.

(4) சந்தாவின் விவரம்.—இந்த ஸங்கத்தில் மெம்பராகச் சேருபவர் ஒவ்வொருவரும் வருஷம் ஒன்றுக்கு 3-ரூபாய் சந்தா செலுத்த வேண்டும்.

(5) இராஜீநாமா.—ஸங்கத்திற்கு மெம்பரா யிருப்பதிலிருந்து விலக இச்சிப்பவர் தமது இராஜீநாமாவை எழுத்து மூலமாய் ஸபையின் காரியதர்சிகளுக்கு அனுப்பவேண்டும். ஸங்கத்திற்குச் செலுத்தவேண்டிய பாக்கி ஏதாவது இருந்தால், அதை முடியவும் செலுத்தாதவரையில் அப்படிப்பட்ட இராஜீநாமா அங்கீகரிக்கப்படமாட்டாது.

(6) ஆபீஸ் காரிய நிர்வாஹகர்கள்.—பிரஸிடெண்டு ஒருவர், வைஸ் பிரஸிடெண்டு ஒருவர், இரண்டு காரியதர்சிகள், ஒரு பொக்கிஷதார் இவர்கள் ஸங்கத்தின் காரியங்களை நிறைவேற்றுகிறவர்கள்.

(7) காரியநிர்வாஹக ஸபை.—ஸங்கத்தாரால் பிரேரிக்கப்படும் விஷயங்களை முடிவு செய்து தீர்மானிப்பதற்கும், அவஸர விஷயங்களை ஆலோசித்து முடிவு செய்வதற்குமாக ஒரு நிர்வாஹக ஸபை வேண்டியதாய் தீர்மானிக்கப்பட்டது. ஆபீஸின் காரியநிர்வாஹகர்களுடன் சேர்ந்து இந்த நிர்வாஹகஸபையில் மொத்தம் 21 மெம்பர்கள் இருப்பார்கள்.

(8) காரியநிர்வாஹக ஸபைக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுத்தல்.—ஆபீஸின் காரிய நிர்வாஹகர்களும், நிர்வாஹக ஸபையின் இதர மெம்பர்களும் மூன்று வருஷத்திற்கு ஒரு முறை புதிதாக ஸங்கத்தின் பொது மெம்பர்களால் தெரிந்தெடுக்கப்படுவார்கள்; அவ்விதம் தெரிந்தெடுக்கப்படுபவர் ஸங்கத்தின் மெம்பர்களாகவே இருப்பார்கள். காரிய நிர்வாஹகர்களிலும், இதர கமிட்டி மெம்பர்களிலும் எவராவது தமது ஸ்தானத்திலிருந்து விலக வேண்டிய ஸமயம் வந்தபோது, அந்த ஸ்தானத்தில் அதுவரையில் இருந்த வந்தவரையே மறுபடியும் நியமிக்கலாம், அல்லது வேறொருவரையும் ஏற்படுத்தலாம். கமிட்டியில் எவரேனும் ஒரு மெமபருடைய அல்லது ஆபீஸருடைய ஸ்தானம் மூன்று வருஷத்திற்குள் ஏதாவது காரணத்தினால் காலியாகுமானால், அந்த ஸ்தானத்திற்கு ஸபையிலுள்ள பொது மெம்பர்களிலிருந்து தகுந்தவர்களை கமிட்டியார் தெரிந்தெடுத்து நியமிக்கலாம். அப்படி ஏற்படுத்தப்படும் ஈந்த மெம்பரும் அடுத்த ஜனரல் மீட்டிங்கு வரையில் அந்த ஸ்தானத்தை வஹிக்கலாம்.

ஆபீஸ் காரியஸ்த்தர்களின் வேலை.

(9) பிரஸிடெண்டு.—ஸங்கத்தின் பொது மீட்டிங்குகளிலும், கமிட்டிமெம்பர்கள் சேர்ந்து நடத்தும் மீட்டிங்குகளிலும் பிரஸிடெண்டானவர் அக்கிராஸனம் வஹிப்பார்.

(10) வைஸ் பிரஸிடெண்டு.—பிரஸிடெண்டு எந்த மீட்டிங்குக்கு வரவில்லையோ அதில் வைஸ் பிரஸிடெண்டானவர் அக்கிராஸனம் வஹிப்பார்.

(11) காரியதர்சிகள்.—மீட்டிங்குகளைக் கூட்டுவது, அவசியமான குறிப்புகளெழுதுவது, அப்போதைக்கப்போது கடிதப் போக்குவரத்துகளுக்கு வேண்டியவைகளை எழுதுவது, ஸங்கத்தின் காரியங்களை நிறைவேற்றுவதில் பொறுப் பேற்றுக்கொள்வது, மற்றும் ஸபையில் நடக்கும் காரியங்களை கமிட்டிக்கும் ஸங்கத்தின் பொது மெம்பர்களுக்கும் அறிவிப்பது முதலிய விஷயங்களை காரியதர்சிகள் கவனிப்பார்கள்.

(12) பொக்கிஷதார்.—பொக்கிஷதார் ஸங்கத்திற்கு வரவேண்டிய பணங்களை வசூல் செய்வதுடன், பெற்றுக்கொண்ட பணத்திற்கு இரசீதுகளையும் கொடுப்பார்.

(13) மானேஜிங் கமிட்டி.—மானேஜிங் கமிட்டியானது, அடியில் கூறப்படும் விஷயங்களை ஆலோசித்து முடிவு செய்வதற்காக, மூன்று மாதத்திற்கு ஒரு முறை, அல்லது வேண்டியபோது கூடும். அவையாவன:—

(a) கணக்குகளைத் தீர்மானித்தலும், (b) புதிதாய் மெம்பராகச் சேருவதற்கு வந்திருக்கும் அபேக்ஷகர்களை ஒப்புக் கொள்வதும், மெம்பராயிருப்பதிலிருந்து விலக விருப்புபவரின் விஷயங்களை ஆலோசித்தலும், (c) எவருடைய சந்தாத் தொகை பாக்கியிலிருக்கிறதோ அவர்களிடமிருந்து அத்தொகைகளை வசூல் செய்ய வேண்டிய வழிகளை ஆலோசிப்பதும், (d) குமாஸ்தாக்களையும் வேலைக்காரரையும் நியமிப்பதும், அவர்களுக்கு சம்பளம் முதலியவற்றை ஏற்படுத்துவதும், அவர்களை வேலைகளிலிருந்து விலக்குவதும், (e) ஸங்கத்திற்கு வேண்டிய உபவிதிகளை ஏற்படுத்துவதும், இருக்கிற விதிகளில் ஏதேனும் மாற்றவேண்டிய விதியை மாற்றுவதும், (f) ஸங்கத்தின் உத்தேசங்கள் மேன்மேலும் விருத்தியாகுமாறு வேண்டிய முயற்சிகளைச் செய்வதும், (g) ஸங்கத்தின் மற்றும் அவசியமான ஸகல காரியங்களையும் கவனிப்பதுமாம்.

(14) காரியதர்சிகள், தாங்களாகவோ, ஸங்கத்தைச் சேர்ந்த நான்கு மெம்பர்களின் சிபார்சின் பேரிலோ மானேஜிங் கமிட்டியாரைக் கொண்டு, ஒரு விசேஷ மீட்டிங்கை தகுந்த காரணத்தைக் கொண்டு கூட்டிவைக்க ஏற்பாடு செய்யலாம்.

(15) பிறகு ஸபை சேரவேண்டிய விதங்களையும், மற்றும் சில சில்லரை நிபந்தனைகளையும் ஏற்படுத்தி, பிறகு இறுதியில் அடியிற் குறிக்கப்படுமாறு காரியநிர்வாஹ ஆபீஸர்களையும் கமிட்டி மெம்பர்களையும் புதிதாகத் தெரிந்தெடுத்தார்கள். ஹானரபுள் மிஸ்டர் T. ஜைனுலாபுடீன் ஸாஹெப், B., A., ஷம்ஸ்-உல்-மூல்க் அவர்கள் பிரஸிடெண்டு. வைத்தியரத்ன பண்டித டி. கோபாலாசாரியர் அவர்கள் வைஸ் பிரஸிடெண்டு. ஆயுர் வேத பூஷண, பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், மஹமட் உஸ்மான் ஸாஹெப் B. A., இவர்கள் இருவரும் காரியதர்சிகள். ஆயுர் வேத பூஷண C. பானு. பொக்கிஷதார்.

ஸங்கத்தின் மற்ற விவரமான விஷயங்களையெல்லாம் கூடிய சீக்கிரத்தில் அச்சிடுவதாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸங்கத்தில் அபிமானமுள்ளவர்கள் எழுதிக் கொண்டால் அவர்களுக்கு இந்த நிபந்தனைகள் அனுப்பப்படும்.

THE PREVENTION OF CHOLERA.

காலரா என்னும் விஷூசியைத் தடுத்தல்.

இந்த மாகாணத்தில், சென்ற ஜனவரி மாதத்தில், கவர்ன்மெண்டார் விஷூசி யென்னும் விஷபேதியைத் தடுப்பதற்கு வேண்டிய சில உபாயங்களை ஆலோசித்தார்கள். கிராமாந்தரங்களிலுள்ள கிணற்று ஜலத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டியதைப் பற்றிய ஆலோசனையே இதில் முக்கியமானது. இதற்காக இப்பொழுது இருப்பதைவிட ஸானிடரி இன்ஸ்பெக்டர்களை அதிகப்படுத்த வேணுமென்று ஸானிடரி கமிஷனராகிய காப்டின் ஜஸ்டிஸ் என்பவர் அறிவித்தார். இவ்விதம் செய்வதானல் ஸானிடரி இன்ஸ்பெக்டர்கள் கிராமங்களில் அதிகமாகச் சென்று அறியாத ஜனங்களை ஹிம்ஸிப்பார்களென்றும், அவ்விதம் ஸ்திரமாக இன்ஸ்பெக்டர்களை ஏற்படுத்தாமல், சிலரை மட்டும் ஆபத்தான ஸமயங்களில் மாத்திரம் கிராமங்களில் சென்று உதவும்படியும், மற்ற காலங்களில் யூனியன் கிராமங்களில் சென்று ஆரோக்யக்குறைவுகள் நேரிடாமலிருப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யும்படியும் நியமிப்பது நலமென்றும் கவர்ன்மெண்டார்

அபிப்பிராயப்பட்டார்கள். பிறகு, ஒவ்வொரு பகுதியிலும் 10 இன்ஸ்பெக்டர்கள் அடங்கிய மூன்று பிரிவுகள் (அதாவது 30 இன்ஸ்பெக்டர்கள்) ஏற்படுத்தி, அவர்களை ஒரு அஸிஸ்டெண்டு ஸர்ஜனின் கீழ் வைப்பது உசிதமென்று ஸானிடரி கமிஷனரும், ஸர்ஜன் ஜெனரலும் சேர்ந்து அறிவிக்க, கவர்ன்மெண்டார், ஒவ்வொன்றிலும் ஸமர்த்தர்களான 10 இன்ஸ்பெக்டர்கள் அடங்கிய இரண்டு பிரிவுகள் (அதாவது 20 இன்ஸ்பெக்டர்கள்) போதுமென்று நிச்சயித்தார்கள். இதற்காக இவ்வருஷத்து பட்ஜெட்டில் 12000 ரூபாய் ஸாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஆகிலும், தற்காலத்துக்கு உபயோகமாகும்படி மூன்று வருஷங்களுக்கு தான் இவ்வேற்பாடென்று கவர்ன்மெண்டார் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஏற்பாடு நிறைவேறுமானால், குளம் குட்டைகளில் மாடு கன்றுகளையும் குளிப்பாட்டி, அத்தண்ணீரிலேயே தாமும் முழுகி, அதையே உட்கொள்பவரும், வீட்டிற்கருகிலேயே அழுகிப் பதன் கெடும் குப்பை முதலியவற்றைச் சேர்த்துக் கொண்டு அறியாமல் துன்பப் படுபவருமான கிராமத்து ஜனங்கள் பெரும்பாலும் காலரா முதலிய ஆபத்துகளுக்கு உட்படாமலிருக்கலாம்.

HOW TO AVOID TAKING COLD.

ஜல தோஷத்தைப் போக்கும் உபாயம்.

ஒவ்வொருவருக்கும் ஜல தோஷம் ஸாதாரணமாயுண்டாவதுண்டு. ஜல தோஷமானது ஸாதாரண மார்ச்சளி முதல், தீவ்ர கபஜ்வரம் (Pneumonia) வரையிலுமுள்ள அனேக அவஸ்தைகளுக்குக் காரணமாகின்றது. ஸாமானிய ஜல தோஷத்தினால் விசேஷமான சரீர மனோவிகாரங்களும், தீவ்ரகபஜ்வரத்தினால் பிராணாபாயமான ஆபத்துகளும் நேரிடுவதால், ஆதிமுதல் முடிவு வரையில் ஜல தோஷமென்பது மிகவும் கொடூரமானதென்றே சொல்ல வேண்டும்.

டாக்டர் கிர்ச்சர்ட் என்பவர் கூறுகிறதாவது:- எவ்வித ஜலதோஷத்தையும் ஆரம்பத்திலேயே வேரறுப்பதற்கு நான் கண்டு பிடித்திருக்கிற ஒரு ஸுலபமான வழி அனைவருக்கும் தகுந்ததாயிருக்குமென்று நம்புகிறேன். சில வருஷங்களுக்கு முன் எனது நண்பர் ஒருவர், ஜலதோஷம் அதிகமாயிருக்கும்போது தன் மொட்டந்தலையையும் முகத்தையும் அடிக்கடி நன்கு சூடுண்டாகும்படி தேய்த்து, அவ்விடங்களில் இரத்தம் நன்றாகப் பரவும்படி செய்துவந்ததில், ஜல தோஷத்தைத் தடுத்து வந்ததாகச் சொன்னார். பிறகு, இவ்விஷயத்தை மனதிலெண்ணிக்கொண்டே, தும்மலுண்டாகும் போது முகம் பெருப்பதையும், ஜலதோஷம் பிடித்தவர் சுபாவமாகவும் தமது இஷ்டத்தின் மேலும் அதிகமாக இவ்விதம் தும்முவதையும் நன்றாக நான் உற்றுநோக்கி வந்ததில், உட்புறங்களில் சைத்தியத்தினால் பாதைப்படும் அவயவங்களுக்கு அதிக இரத்த வோட்டத்தையும், அதன் மூலமாய் முகத்திற்கும் மூக்குக்கும் வேண்டிய சூட்டையுண்டுபண்ணுவதற்குமே இவ்வாறு தும்மலென்னும் இயற்கையான காரியம் ஏற்பட்டிருப்பதாய் அறிந்தேன். அது முதல் இந்த முறையை நிலை நிறுத்துவதற்காக, ஜல தோஷத்தினால் முகம் முதலியவை குளிர்ந்தும் வெளுத்துமிருக்கும் போது, அவ்வவயவங்களில் அதிகமாய் இரத்தம் பரவுவதற்கு வேண்டிய அனேக உபாயங்களை பரிக்ஷா பூர்வமாகச் செய்துவந்தேன். ஆகையால், நான் இப்பொழுது சொல்வது என்னுடைய மூன்று வருஷத்திய விசேஷானுபவத்தின்மேல் நிர்மாணிக்கப்பட்ட விஷயம்.

எவனொருவனுக்கு ஜல தோஷமுண்டாய் மூக்கின் உட்புறம் சிறிது சுருக்கங்கொண்டு இருப்பதாக உணர்ச்சியுண்டாகிறதோ, அவன்

உடனே அடியில் கூறப்படும் விதம் செய்ய வேண்டும். தலை நன்றாக பூமியில் படும்படி நின்றவாறே குனிந்துகொண்டு, முகம் நன்கு சிவக்கும் வரையில் அந்நிலையிலேயே கஷ்டப்பட்டு நிற்கவேண்டும். பிறகு, தலையை நிமிர்த்தி மூக்குவழியாகவும், சிறிது வாய்வழியாகவும் இழுத்திழுத்து மூச்சு விடவேண்டியது. நாசியின் துவாரங்கள் நன்றாகத் திறந்து, மூக்கு வழியாகவே மூச்சுவிடும் நிலைமை ஏற்படும் வரையில், இவ்விதமே அடிக்கொரு முறை குனிந்து நிமிரவேண்டும். ஆனால், நன்கு தேஹப்பயிற்சி செய்து மிகச் சூடான பானங்களை அடிக்கடி உட்கொள்வதாலும் ஜலதோஷம் குணமாவதாக பலர் சொல்லுகின்றனர்; ஆகிலும், அவற்றால் அதிக ஜலதோஷத்தில் நாசியின் துவாரம் சைத்தியத்தினால் சுருங்கி அடைபட்டிருப்பது குறைவதில்லை.

ஆகையால், இவ்விஷயம் பொதுவாக வெகு ஸாதாரணமானதென்றே பெரும்பான்மையோருக்குத் தோற்றியபோதிலும், கபஜ்வரம் முதலிய பிராணாபாயமான ரோகங்கள் வராதபடி தடுப்பதற்கு இதுவே வெகு பெரிய விஷயமென்று அனைவரும் கிரஹிக்கவேண்டும். (மந்த்லி ஸைக்லோபீடியா என்கிற வைத்திய பத்திரிகை இவ்விதம் கூறுகிறது.)

NOTES AND ITEMS OF INTEREST
பலவகைக் குறிப்புகள்.

சரீரபோஷணையில் அரிசிக்குள்ள தனம்:—அரிசியின் தவிட்டில் ஆரிஜானின் (Oryzanin) என்கிற ஒருவித ஸத்து இருக்கின்றது. இந்த தவிட்டைப் போக்கி சுத்தமாக வெளுத்த அரிசியை மட்டும் நாய், கோழி முதலியவற்றிற்கு உணவாகப் போட்டு பரீக்ஷை செய்ததில், அவை வரவர வியாதி கண்டு பலவீனப்பட்டு இறந்தும் விட்டன. இதற்கு, சரீரதாதுக்களின் போஷணைக்கு அவசியமான ஆரிஜானின் என்கிற ஸத்தில்லாத உணவைக் கொடுத்து, அதனால் தகுந்த போஷணையில்லாமல், சரீரவலிவும் தனமும் குறைந்து, மிக மெலிவடைவதே முக்கிய காரணம். கொழுப்பு, பிரோடீட் என்கிற போஷிக்கும் ஸத்து, உப்பு முதலியவை குறைந்திருக்கும் உணவுப் பொருட்களில் ஆரிஜானின் என்கிற ஸத்தைச் சேர்த்தால் தகுந்த போஷணசக்தி அவற்றிற்குண்டாகின்றது. ஒரு நாய் பலநாள் பட்டினியால் வருந்த, அதற்குப் போடும் உணவில் ஆரிஜானின் 3 கெல்லெடை சேர்த்துக் கொடுத்து வந்ததில் அதற்கு வரவர நல்ல சக்தி வந்தது. ஆரிஜானின் அநேக உணவுப்பொருட்களில் வேண்டியவளவு கலந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இயற்கைத் தலைவலியும் துகதோஷமும்:—ஒரு ரோகி தினந்தோறும் இரவில் ஏதோ ஒரு குறித்த நேரத்தில் தலைவலியிருப்பதாகவும், பகலில் அவ்விதம் தலைவலி உண்டாவதில்லையென்றும் சொன்னால், அத்தலைவலிக்கு துகதோஷம் என்னும் மேஹரோகம் (Syphilis) முக்கிய காரணங்களில் ஒன்றாக இருக்குமென்று நம்பலாம். இவ்விஷயத்தை மனதில் வைத்துக்கொண்டே, அவ்வியாதியின் வாஸ்தவாம்சத்தை நன்கு பரீக்ஷித்தறிய வேண்டும். (க்ளினிகல் ஜர்னல்-Clinical Journal).

கந்தகமும் இரஸமும்:—கந்தக ஸம்பந்தமான ஒரு ஔஷதத்தை உட்கொண்டு வருகையிலேயே, சரீரத்தின்மேல் விசேஷமாக இரஸம் சேர்ந்த மருந்து ஏதாவது உபயோகப்படுத்தப்படுமானால், மெர்குரிக் ஸல்பைட் (Mercuric Sulphide) என்னும் ஒருவிதமான இரஸ சஞ்ஜனியானது தோலின் மேல் படிவது ஸஹஜம். (ப்ராக்டிகல் மெடிஸின்—Practical medicine).

ஸந்நிபாத ஜ்வரசிகித்ஸை:—டைபாய்ட் (Typhoid) ஜ்வரமென்று வழங்கப்படும் ஸந்நிபாதஜ்வரத்தைத் தடுப்பதற்கு அமெரிக்கா தேசத்து ஒரு வைத்தியர் புதிதாக ஒரு முறை கண்டு பிடித்திருக்கிறாராம். இப்பொழுது மஸூரிகா என்னும் பெரியம்மையைத் தடுப்பதற்கு அம்மை குத்துவதுபோல், ஸந்நிபாதஜ்வரத்தைத் தடுப்பதற்கும் ஒருவித பாலைத் தோலின் மூலமாக (Injection) உட்செலுத்தினதில், இரண்டு முதல் பதினாறு வயது வரையிலுமுள்ள

359 பிள்ளைகளுக்கு மூன்று வருஷம் வரையிலும் ஸந்நிபாதம் என்னும் இந்த விஷஜ்வரம் உண்டாக வில்லையென்றும், இவ்விதமாக தோவின் மூலமாய் மருந்தை உட் செலுத்துவதால் ஒருவித கெடுதியும் நேரிடுவதில்லையென்றும், ஆனால் மூன்று வருஷத் திற்கு ஒரு முறை இவ்விதம் செய்ய வேண்டுவது அவசியமென்றும் அந்த வைத்தியர் கூறுகின்றாராம்' (ப்ராக்டிகல் மெடிஸன் Practical Medicine.)

விஷமஜ்வரத்தைத் தடுத்தல்:—இரத்தத்திலுள்ள குருகடங்களென்னும் (Blood - Corpuscles) சோணித பரமாணுக்கள் ஏற்கனவே தகுந்த சக்தி யுள்ளவைகளாயிருந்தால் அவற்றில் மலேரியா என்னும் விஷமஜ்வர ஸம்பந்தமான விஷங்கள் பிரவேசிக்க மாட்டா வென்றும், ஆகையினால் இரத்தத்தின் குரு கடங்களின் பலம் குன்றாதபடி முன்ஜாக்கிரதை யெடுத்துக் கொள்வதே விஷமஜ்வரத்தைத் தடுப் பதற்கு நல்ல உபாயமென்றும் காஜோஸ்ஸோ (Cajozzo) என்கிற இடாலி தேசத்து டாக்டர் ஒருவர் கூறுகிறார். நல்ல காற்றோட்ட மில்லாத இடத்தில் வஸிப்பதாலும், செடி கொடி முதலியவை அழுகுவதா லும் உண்டாகும் கரியமிலவாயு வினால் (Carbon c acid gas) இரத்தத்தின் குருகடங்கள் பல ஹீனப்படு கின்றன வென்றும், கெட்ட காற்றினால் விஷமஜ்வரம் உண்டாவதாக உலகத்தில் வழங்கப்படும் விஷயத்தை உட்புகுந்து பார்த்தால் அவற்றின் த[illegible]த்தை இவ்விதமாகத்தான் தீர்மானிக்க வேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். (லைப் அண்ட் ஹெல்த்-Life and Health).

எல்லா இந்திய ஸுகாதாரக் கான்பரன்ஸ்:—அடுத்த ஸுகாதாரக் கான்பரன்ஸுக்கும், மலேரியா கான்பரன்ஸுக்கும் (All Indian Sanitary Conference and Malaria Conference) அடியில் குறிக் கப்படுகிற உத்தியோகஸ்தர்களை சென்னைக் கவர்ன் மெண்டார் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்திருக் கின்றனர்:—ஹானரபுல் ஸர்ஜன் ஜெனரல் W. B. பானெர்மென், C.S.I., I.M.S., சென்னை ஸானி டரி கமிஷனரான காப்டின் W. A. ஜஸ்டிஸ் I. M. S., சென்னை ஸானிடரி எஞ்ஜினீரான மிஸ்டர் W. ஹட்டன்; கிங்ஸ் இன்ஸ்டியுட்யூட்டின் டைரக்டரான டாக்டர் F. M. கிப்ஸன்; கலா ஆஜார் என்கிற விஷஜ் வரத்தின் ஆராய்ச்சிக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் காப்டின் W. S. பாட்டன், I.M.S., டிப்டி ஸானிடரி கமிஷனரான காப்டின் M. J. க்விர்கே, I M.S., சென்னை முனிஸிபாலிடியில் ஹெல்தா பீஸராயுள்ள டாக்டர் W. R. மெக்டானல்ட்., டை முனிஸிபாலிடி யின் ஸ்பெஷல் எஞ்ஜினீரான மிஸ்டர் W. J. மாடலி இவர்கள் ஸுகாதாரக் கான்பரன்ஸுக்குப் பிரதிநிதி களாவார்கள். ஹானரபுல் ஸர்ஜன் ஜெனரல் W. R பானர்மென், காப்டின் ஜஸ்டிஸ், மேஜர் R. S. ராஸ் I.M.S., காப்டின் J. H. ஹாரன் இந் நால்வரும் மலேரியா கான்பரன்ஸுக்குப் பிரதிநிதிகளாக நிய மிக்கப் பட்டிருக்கின்றனர். இந்தியா கவர்ன் மெண்டி லிருந்து அறிக்கைக் கடிதம் வந்ததுமே, இக்கான்ப ரென்ஸுகள் நடக்கப்போகிற காலத்தையும், இடத் தையும், நடக்கப்போகிற விஷயங்களைப்பற்றிய விவ ரங்களையும் சென்னைக் கவர்ன்மெண்டார் சீக்கிரத்தில் வெளியிடுவார்கள்.

ஒரு புதிய பாஸ்டர் விஷவைத்தியசாலை.—நாம் வைத்திய கலாநிதியின் முதல் ஸஞ்சிகையிலேயே இரங்கூன் முதலிய வேறு சில இடங்களிலும் பாஸ்டர் விஷவைத்தியசாலை ஏற்படுத்துவதற்குக் கவர்ன்மெ ண்டார் பிரயத்தனப்பட்டு வருகிறதாகக் குறிப்பிட்டி ருக்கின்றோம். இப்பொழுது இரங்கூனில் அவ்வித சாலை ஒன்று ஏற்படுத்துவதைப்பற்றி இந்தியா மந்திரி அனுமதி கொடுத்துவிட்டார். வைத்தியசாலை கட்டு வதற்காக பர்மாக் கவர்ன்மெண்டார் ஸட்டல் பஜார் என்கிற இடத்தில் இரண்டு ஏகரா நிலத்தை உதவி யிருக்கின்றனர். கட்டடவேலையும் இப்பொழுது துரி தமாக ஆரம்பிக்கப்பட்டு வருகிறதாம்.

I.M.S. பரீக்ஷையில் தேறிய இந்திய மாணு க்கர்கள்.—இப்பொழுது இங்கிலாந்தில் நடந்தேறிய I. M. S. பரீக்ஷையின் ரிஸல்டு வெளியாயிருக்கிறது. 22 மாணுக்கர் இப்பரீக்ஷைக்குப்போனதில் 16. பேர் தேறினார்கள். இந்த 16பேரில் 5 மாணுக்கர் இந் தியர்களென்றறிய நாம் மிகவும் ஸந்தோஷப்படுகின் றோம். உத்தியோகம் கொடுப்பதற்காகவும் இவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டதாய் அறிகிறோம். இவ்வித பெரிய பரீக்ஷையில் தேறிய மாணுக்கர்களின் பட்டி யில் இந்த ஐவரில் 3 பேர் முதலில் குறிக்கப்பட்டிருக் கின்றனர்: ஸாஹிப் ஸிங்கு ஸோக்கி, M. A. B. Sc; முதல்வர்; அடுல் கிருஷ்ண வின்ஹ, M. B. 2 - வது; S. துரைஸ்வாமி, L. R. C. P; 3- வது. மிகுந்த இருவரும் 6 8-வது வது ஸ்தானங் களிலிருக்கின்றனர். இவர்கள் இவ்விதம் சிறந்த வைத்திய பரீக்ஷையில் ஜயமடைந்ததுடன், தாம் வஹி க்கும் உத்தியோகங்களிலும் ஜனங்களுக்கு நன்மை கள் நேரிடுமாறு புகழ்ச்சிக்குரிய காரியங்களைச் செய்வ ரென்றும் ஸந்தோஷத்துடன் எதிர்பார்க்கிறோம்.